உ

திருத்தணிகேசன் துணை

# முருகரும் தமிழும்

ராவ் பஹதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.

எழுதியது

MARCH 1941

*All Rights Reserved*

292, லிங்க செட்டித் தெரு
சென்னை

விலை 0-2-0

திருத்தணிகேசன் துணை

# முகவுரை

'முருகரும் தமிழும்' என்னும் விஷயத்தைப் பற்றி [illegible] டிசம்பர் மாதம் சென்னை சிந்தாதிரிப் பேட்டையிற் [illegible] வேண்டியிருந்தது. அப்பொழுது சொன்ன விஷயங்களை நூலாகத் தொகுத்து வெளியிடின் அது பயன்தரும் என்று சில அன்பர் தெரிவித்தனர். அங்ஙனமே தொகுக்கப்பட்டு குகஸ்ரீ - கிருபாநந்தவாரி அவர்கள் வெளியிடும் 'திருப்புகழ் அமிர்தம்' என்னும் அருமைப் பத்திரிகையில் இந்நூல் முதலில் வெளிவந்தது. இப்பொழுது, திருத்தணிகேசன் திருவருள் கூட்டிவைக்கத் தனிநூலாக இது வெளிவருகின்றது. நூலின்கண் உள்ள குறைகளைப் பொருட்படுத்தாது குணத்தையே கொள்ளுமாறு அன்பர்களை வேண்டுகின்றேன்.

"நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தோறும் எப்போதும், அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன் சொரியும்" ஸ்ரீ தணிகை யெம்பெருமான் திருவடிக்கண் இணையிலாப் பக்திபூண்ட வள்ளிமலை ஸ்ரீ திருப்புகழ் சச்சிதாநந்த ஸ்வாமிகளுக்கு இந்நூலை உரிமை செய்கின்றேன்.

"முருகரும் தமிழும்" என்ற இந் நூலை
முறைதெரிந் தடியனேன் எழுத
அருகனிங் கில்லேன் எனினுநல் லன்பர்
அருவரா திதனையேற் பதற்கே
பெருகுநல் லிசையிற் றிருப்புகழ்ப் பாவைப்
பிழையிலா தெவருமே பயின்றிங்
குருகுமா றியற்றுந் திருப்புகழ்ச் சாமிக்
குரிமை செய் தேனிந்த நூலை.

சென்னை,
3-2-1941.

வ. சு. செங்கல்வராயப் பிள்ளை.

உ

திருத்தணிகேசன் துணை

# முருகரும் தமிழும்

முருகக் கடவுளுக்கும் தமிழுக்கும் உள்ள இணைபிரியா நிலை வேறு யாருக்கும் எதற்கும் இல்லையெனத் துணிவுபடக் கூறலாம். இதனுண்மை தமிழ் நூல்களெல்லாம்,

‘ தமிழ்க்கடவுள் ’, செந்தமிழ்க் கடவுள் ’, ‘ செந்தமிழ் நூலோன் ’, ‘ தமிழ்க்கு நல்ல தண்டமிழ் முருகன் ’— இன்னபல திருநாமங்களிட்டு இவரை அழைப்பதாற் பெறப் படும். முருகபிரான் தமிழ்க்கடவுள், தமிழ்ப்புலவர், தமிழ் விநோதர், தமிழ்க்குரு, தமிழ்ப்பிரியர், தமிழ்ப்பித்தர், தமிழ் மருந்துண்போர் என்பதற்குச் சான்று கூறுவோம்.

**1. தமிழ்கடவுள் :** தமிழுக்கு ஆதார பூதமானவர் :

(1) “சேய் தமிழ்நூற் சீர்க்கு ஐ”
(இயற்றமிழ் நூலுக்குரிய முப்பது சீருக்கும் புலவனாகிய தெய்வம்) —கந்தரந்தாதி-37

(2) “செந்தமிழ் நூற் சீரங்க ராக விநோத என்பார்க் கில்லை தீவினையே”—(செவ்விய தமிழ்ப் பனுவலின் சீர்முதலிய எட்டுறுப்புக் குரிய பாவலனே! கீதத்தில் உல்லாசனே! என்று துதிக்கின்றவர்க்குத் தீவினை இல்லை) —கந்தரந்தாதி-98

முருகரும் தமிழும்

2. **தமிழ்ப்புலவர்** : முதற்புலமை வாய்ந்து தமிழின்கரை கண்ட பெருந்தமிழ்ப் புலவர்-என்க:

(1) 'நாலுறி புலவ'-"பலர் புகழ் நன்மொழிப் புலவரேறே"

—திருமுருகாற்றுப்படை

(2) 'பெருந்தமிழ் வார்த்த அருந்தமிழ்ப் புலவனும் நீயே'

—கல்லாடம்.

(3) 'செஞ் சொல் தெரி புலவோனே'

—திருப்புகழ்-614

(4) 'மகிழ்ந்த முத்தமிழிற் பெரியோனே'

—திருப்புகழ்-294

(5) 'தமிழ்தனைக் கரைகாட்டிய திறலோனே'

—திருப்புகழ்-1286

(6) 'திருத்த முத்தமிழ்க் கவிக் கொருத்த'

—திருப்புகழ்-252

(7) 'கொழுதமி ழொரு முதற்புல மைக்குக
கொட்டுக சப்பாணி

...வடி. யமரு மிடைககழு யறபுத
கொட்டுக சப்பாணி.'

—திருவிடைக்கழி பிள்ளைத்தமிழ்.

3. **தமிழ்விநோதர்** : முத்தமிழ் ஆய்வதிலேயே பொழுது போக்கும் அவா உடையார் என்பது :

(1) 'அதிமதுர சித்ரகவி நிருபனும் அகத்தியனும்
அடிதொழு தமிழ்த்ரய விநோதக் கலாதரனும்:'

—திருவகுப்பு.

(2) 'மீனவனு மிக்கபுல வோரு முறை பொற்பலகை
மீதமர் தமிழ்த்ரய விநோதக் காரனும்'

—திருவகுப்பு

(3) 'முத்தமிழ் வித்வ விநோதா கீ,
மற்றவ ரொப்பில ரூபா தீபா
முத்தி கொடுத்தடி யார்மேல் மாமால் முருகோனே

—திருப்புகழ்-838

4. **தமிழ்க்குரு :** தமிழ் ஆசான் என்பது :

(1) 'சேந்தமிழ் தெளிவு கொண்டடி யார்க்கு விளம்பிய
பெருமாளே'

—திருப்புகழ்-1192

'மெய்ப்பலகைச்
சதுபத்து நவப்புலவர்க்கும் விபத்தியில் ஞான—
படலத் துறலக் கணலக் யதமிழ்த்
த்ரயமத் திலகப் பொருள்வ்ருத் தியினைப்
பழுதற் றுணர்வித் தருள்வித் தகசற் குருநாதா!'

—திருப்புகழ் 126

5. **தமிழ்ப்பிரியர்.**—தமிழிற் காதலுடையாரென்பது

(1) 'உணர்வோர் படித்த தமிழ் சேவியார
வைத்தருளு முருகோனே !'

—திருப்புகழ் 224

(2) 'தண்டரள மணிமார்ப செம்பொனெழில் செறிரூப
தண்டமிழின் மிகுநேய முருகேசா !'

—திருப்புகழ் 729

(3) 'பெய்யு முத் தமிழிற் றயாபர !
பிள்ளைகட்க் குரை செப்புநாயக !'

—திருப்புகழ் 830

(4) 'தூயவர் சுகிக்க முத்தமிழ் மாலா யோதிய
செழிப்பை நத்திய சீலா வீறிய மயில்வீரா !

—திருப்புகழ் 853

பாட்டில் விருப்புடையார் என்பது :—
'நறுமலர் வள்ளிப் பூநயந் தோயே !
கெழீஇக் கேளிர் சுற்றம் நின்னை
எழீஇப் பாடும் பாட்டமர்ந் தோயே!

—பரிபாடல்

6. **தமிழ்ப்பித்தர்.**—தமிழால் தம்மை வைதாரையும் வாழவைப்பார் என்பது.

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையும் அங்கு வாழ வைப்போன் !

—கந்தரலங்காரம்

7. **தமிழ் மருந்துண்போர்.**—(மருந்து-அமுது)

முருகக்கடவுள் 'சேய்,' 'குழந்தைக் குமரன்', 'குழந்தை வடிவேலன்' அல்லவா? இந்தக்குழந்தை வளருதற்கு வேண்டிய உணவு தமிழே. இந்தக் குழந்தைக்குக் காப்புப்பொருள் (பாதுகாப்புப் பொருள்) தமிழே. குழந்தைக்கு முதல் முதல் கொடுப்பது தேன். பின்னர் வளருதற்கு வேண்டியது பால் அமுது. இந்தக் குழந்தை முருகன் வளர்தற்குத் தேன் எது ? பால் அமுது எது ? இதற்கு விடை வரகவி மார்க்க சகாய தேவர் அருளிய திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழிற் பின்வருங் காப்புச் செய்யுளிற் காணலாகும்.

"அம்மைமுலை யுண்டுவிளை யாடும்இளை யோனை எமை
யாட் கொண்ட குமரேசனைச்
செம்மையுள ஆறுமுக னைத்திரு விரிஞ்சைவரு சேயைப்
புரந்தருள்கவே
மும்மைமலம் அகலக் கீரமுனி சொன்ன திரு முருகா
றெனுந் தேறலும்
எம்மருணகிரிநாதர் ஓதுபதி னாறு பிரந்திருப்புகழ்
அமுதுமே!'

திருமுருகாற்றுப்படை என்னுந் தேன் முதலில் குழந்தைக் குமரனைக் காக்கும். பின்னர்த் திருப்புகழ் அமுது அக்குழந்தையைக் காக்கும். கால அளவிலும் திருமுருகாற்றுப்படை முதன்மைத் தானத்தது. இதனைப் "பாவுள் முன்னுறவந்து நிற்கும் முருகாற்றுப்படை" என்றார் காளத்திப் புராணத்தில்.

இங்ஙனம், முருகக்கடவுளைப்போலத் தமிழில் ஈடுபட்டார் ஒருவரில்லை. அவரைப்போலத் தமிழில் மனங்கரைந்தார் ஒருவரில்லை. தமது தமிழ்க்காதலை எவ்வெவ்வாறு அவர் விளக்கியுள்ளார் என்பதை ஆராய ஆராய வெகு விநோதமாயிருக்கும். ஒருகால்—தமிழ்ப் பாடல் பாடித் தமிழைப் பரப்புவார்—தமிழுலகை வாழ்விப்பார்: ஒருகால்—தமிழ்ப் புலவர் குழாத்துள் தலைமை வாய்ந்து அவர் தம் கலாம் தீர்ப்பார்; ஒருகால்—தமிழ்ப் புலவர்களோடு விநோத சம்பாஷணை கொள்வார், வாது செய்வார், தமிழ்ப்பா பாடுவார், தமிழ்ப்பா பெறுவார். ஒருகால்—தம்மைச் சரணடைந்த தமிழ்ப் புலவர் நெஞ்சிற் செஞ்சொல் தந்து வாதில் அவருக்கு வெற்றிவர வந்துதவுவார். ஒருகால்—அடியர் கனவிலே தோன்றிப் பாடென்று கட்டளையிட்டுத் தமிழ்ப்பா பெறுவார். ஒருகால் புலவர்களை அச்சுறுத்தியும், வெருட்டியும், தண்டித்தும்

தமிழ்ப்பா பெறுவார். ஒருகால்—நோய் ஏவி அந்நோய் தீரப் பாடல்பாடும்படி செய்வித்துப் பாடல் பெறுவார்.

மேற்கூறியவற்றின் உண்மை எல்லாம் விளங்க முருகக் கடவுள் தமிழின் பொருட்டுச் செய்த லீலைகளை ஆதிகாலம் முதல் இன்றளவும் வெகு சுருக்கமாக விளக்குவாம்.

## 1. குறுமுனிக்குத் தமிழ் போதித்தது

முருகக் கடவுள் "தமிழ்க் கடவுள்" ஆயிற்றே; அவருடைய முதன் மாணாக்கர் யாரெனின் எழுகடலையும் உள்ளங்கையிலடக்கி, இறைவனைத் தமது உள்ளத் தடக்க வல்ல பேராற்றல் உடைய அகத்திய முனிவரேயாம்.

பல்லாண்டுகளுக்கு முன்பு அகத்திய முனிவர் காசித் தலத்திற் சிவபிரானது சந்நிதியை யடைந்து ஈசனைப் போற்றி நின்று, "எங்கள் பெருமானே! அடியேற்கு ஒரு விண்ணப்பம் உண்டு, அது கேட்டருள்வீர்" எனப் பணிந்தார். இறைவனும் "நன்று, அஃதியாது? என, அகத்திய முனிவர், "யாரு மகிழ்ச்சி திளைக்கும் செந்தமிழ் என்னும் திருத்தகு பாடை தந்தருள் ஞானமும் தந்தருள்" என்றார். "யாவருக்கும் இன்பம் ஊட்டுகின்ற செந்தமிழ் என்னும் திவ்ய பாஷையின் இலக்கிய இலக்கண அறிவெலாம் வேண்டும், பின்னர் ஞானமும் வேண்டும்" என வேண்டினர். அதைக்கேட்ட வள்ளலார் "செழுந்தமிழ் அறிவும் சிவ ஞானப்பேறும் நீ விரும்பினால் காவிகிரி என்கிற திருத்தணிகை மலையை அடைந்து, ஆண்டு "ஞானசக்தி தரன்" என்னும் திருநாமத்துடன் விளங்கும் எனது குமாரன் அறுமுகத் தண்ணலை மனத்திடை யிருத்தித் தவஞ்செய்க; உன் உள்ளம் விழைந்த விழைவெல்லாம் கைகூடும்" என்றனர். அகத்தியரும் அவ்வாறே தணிகைமலையை அடைந்து தவங் கிடந்து வழிபாடெலாம் இயற்றத், தணிகையெம்பெருமான்

எதிர்தோன்றி "அன்ப! தவத்தாற் சால மெய்த்தனை! (மிக இளைத்துப் போனாய்) வேட்டது என்? நுவலுதி! (விரும்பினது யாது? கூறுக) என்றார். அகத்தியரும் வந்தனைகள் பல செய்து "கோட்டிய மெய்யினோடும் குடங்கையாப் புதைத்துக் கட்டி", "அடியேனுக்குத் தமிழின் பாஷைப்புணர்ப்பு இனிது அருளுக—மெய்ஞானமும் வழங்குக" என வேண்டினர். அறுமுக வள்ளலும் அகத்தியனார்க்கு மெய்ஞ்ஞானம் பாலித்துச் செந்தமிழ்ப் பரப்பின் சீருஞ் சிறப்பும் செவ்வனே உணர்த்தி அவரைத் தமிழ்ப்பாஷைக்கு முதற்குரவனாக்கினர். "அறுமுகக் கடவுள் அன்னான், தன்னை நற்றமிழின் பாஷை தனக்கு முன்குரவனாக்கி" என்பது தணிகைப் புராணம்.

"வாழ்வே யென்—றோதி முனிகேட்க
உனை முருகர் சொன்னாரோ" —தமிழ்விடுதூது.

"சிவனைநிகர் பொதிய வரை முனிவனக மகிழ இரு
செவிகுளிர இனியதமிழ் பகர்வோனே"
—திருப்புகழ்—49

"குறுமுனிக்கும் தமிழுரைக்குங்
குமர முத்தந் தருகவே"
—செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்.

## 2. முருகபிரான் உக்கிரப்பெருவழுதியாய்த் தமிழாய்ந்த லீலை

மதுரைப்பதியில் தமது தந்தை சிவபிரான் "சௌந்தர பாண்டியன்" என்னும் திருநாமத்துடன் ஆண்டுவந்த பிறகு, முருகபிரான் உக்கிர பாண்டியராகத் திருவவதாரஞ்செய்து ஆண்டுவந்தனர். தந்தையும் மகனும் அங்ஙனம் மதுரையில் அரசுபுரிந்து சங்கப்புலவர்களுடன் தமிழாய்ந்தது தமிழ்ச்

சுவை பருகும் வேட்கைபற்றியே என்று குமரகுருபர சுவாமிகள் தாம் இயற்றிய மதுரைக்கலம்பகத்தில்—"தடாதகா தேவியென் றொருபேர் தரிக்கவந்ததுவும், தனிமுதல் ஒரு நீ சௌந்தரமாறனானதுவும், குமரவேள் வழுதி உக்கிரன் எனப் பேர் கொண்டதுந் தண்டமிழ் மதுரங் கூட்டுணா எழுந்த வேட்கையா லெனிலிக் கொழி தமிழ்ப் பெருமை யாரறிவார்?" என மிக அருமையாகப் பாராட்டியுள்ளார். 'கூடல் புரந்தொருகாற் கூடற் புலவரெதிர், பாட லறிவித்த படைவேளும்'—என்பது தமிழ்விடுதூது.

## 3. முருகர் உருத்திரசன்மராய்ச் சங்கப் புலவர்களுடைய கலாம் தீர்த்துத் தமிழாராய்ந்த லீலை

சங்கப் புலவர்கள் தமிழ் ஆராய்ந்திருந்த காலத்துச் சிவபெருமான் அளித்த "இறையனார் அகப்பொருள்" என்னும் நூலுக்குச் சங்கத்திருந்த ஒவ்வொரு புலவரும் தமக்குத் தோன்றியவாறே பொருள் கண்டனர். கண்டபின் தாம் தாம் இயற்றிய உரையே செம்மை உரை என்று வாதிட்டனர். தமக்குள் கலாம் தீரவேண்டி ஆலவா யடிகளைப் பணிந்து 'இறைவனே! எவ்வுரை மெய்யுரை என் றறியுந் திறமிலேம். நீயே உதவுதி' எனப் புலவர்கள் வேண்டச் சிவபிரானும் வித்வகோலத்துடன் தோன்றி, "இவ்வூரில் நம்முடைய பக்தன், வணிகன், உப்பூர்கிழார் மகன், ஊமன், பாலன், உவமையில் ஞானி; அவன் நாமம் உருத்திர சன்மன், அவன் திறம் உரைப்பின் வென்றிச் சரவண குகனே ஆகும்; நீங்கள் கண்ட உரை எலாம் அவன் முன்பு கூறுவீராக; அவன் எவ்வுரையைக் கைக்கொள்ளுகின்றனனோ அதுவே உண்மை உரையாம்" எனத் திருவாய் மலர்ந்தனர். ஊமைப் பிள்ளையராயிற்றே ஊமன் எங்ஙன் மெய்யுரை எனக்

தெரிவிக்கும் எனப்புலவர்கள் வினவ, இறையவனும் 'அவ் வூமன் "செந்தமிழ் தேர் செட்டி", அவ்வூமனுக்கு யாவொரு உரையைக் கேட்டால், "தோன்றிய புளக மெய்யும்," "துளி படு கண்ணும் உண்டோ அவ்வுரையே உரை, மற்றவை உரை யன்று. நீங்கள் இகலவேண்டாம்" எனக்கூறி மறைந்தருளி னர். புலவர்களும் அவ்வூமனைச் சிறப்பொடும் அழைத்துச் சிம்மாதனத் திருத்தி, தூபதீபாதி நல்கி தாமுரைத்த உரை யெலாம் அவன்முன்பு உரைத்தார்கள். ஊமைனை மகிழ்ந்தான் சிலர் சொல்லாழ்ச்சியை; மகிழ்ந்தான் சிலர் பொருளை: இகழ்ந் தான் சிலர்சொல்வைப்பினை; இகழ்ந்தான் சிலர் பொருளைப், பின்னர், வளமுறு கீரன், தரைபுகழ் கபிலன், மாசறு பரணன்- இம்மூவர் உரையைக் கேட்டலும் ஊமன் பெருவிருப்பெய்தி புளகிதமெய்யும் துளிபடு கண்ணும் பொருந்தினன். இத்திரு விளையாடலைக் கண்ட யாவரும் மெய்யுரை பெற்றும் என மகிழ்ந்தனர்; ஆவலாய்ப் பெருமான் ஆடலை வியந்தனர்; ஊமை யாய் வீற்றிருந்த, "அருந்தமிழ்ச் செட்டியாஞ் செட்டி இலகிய மயின்மீ தறுமுகத்தோடும் இனியபன் னிருகரத்தோடும், புலவர்கண் டிறைஞ்ச அருளினால் விளங்கிப் போயினன்." முருகபிரான் செய்த இத்திருவிளையாடலைத் தமிழ் நூல்கள் எல்லாம் மிகப் பாராட்டிக் கூறும். நக்கீரரே "நூலறி புலவ" "பலர்புகழ் நன்மொழிப் புலவரேறு"—என முருகபிரானைப் பாராட்டுவர்.

(1) "மணிக்கா லறிஞர் பெருங்குடித் தோன்றி
இறையோன் பொருட்குப் பரணர் முதல் கேட்கப்
பெருந்தமிழ் விரித்த அருந்தமிழ்ப் புலவனும்
பாய்பா யறிய நீயே ஆதலின்-"

என்பது கல்லாடம்—முருகர் துதி

(2) சடிலத் தவனிட் டவிசிட் டகுலத்
தொருசெட் டியிடத் தினுதித் தருள்வித்
தக! ருத் ரஜன்மப் பெயர்செப் பியிடப் பரிவாலே—

—மெய்ப் பலகைச் சதுபத் தூகவப்
புலவர்க் கும்விபத் தியில் ஞான—

படலத் துறுலக் கணலக் யதமிழ்த்
த்ரயமத் திலகப் பொருள் வ்ருத் தியினைப்
பழுதற் றுணர்வித் தருள்வித் தகசற் குருநாதா!

—திருப்புகழ்-126

(3) ஏராரு மாட கூட மதுரையின்
மீதேறி மாறி யாடும் இறையவர்
ஏழேழு பேர்கள் கூற வருபொரு ளதிகாரம்-

ஈடாய ஊமர் போல வணிகரில்
ஊடாடி ஆல வாயில் விதிசெய்த
லீலா விசார தீர வரதர குருநாதா!

—திருப்புகழ்-350.

(4) முச்சகர் பராவு சரணக்கார -இனிதான
முத்தமிழை யாயும் வரிசைக் கார! —திருப்புகழ்-39

(5) செஞ்சொற் புலவர்கள் சங்கத் தமிழ்தெரி
செந்திற் பதிநக ருறைவோனே —திருப்புகழ்-95

(6) வழுதியர் தமிழி னொருபொரு ளதனை
வழிபட மொழியு முருகேசா —திருப்புகழ்-234

(7) முட்ட வுண்மை சொல்லு செட்டி —திருப்புகழ்-388

(8) தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே!

—திருப்புகழ்-592

(9) உரைக்கச் செட்டியனாய்ப் பன் முத்தமிழ்
[மதித்திட்டு —திருப்புகழ்-991

(10) " திருக்தகு மதுரை தன்னிற் சிவன்பொருள்
[நிறுக்கு மாற்றால்
உருத்திர சருமனாகி யுறுபொருள் விரித்தோன் "
—கந்தபுராணம்.

சிவபிரான் தாம் இயற்றிய "கொங்குதேர் வாழ்க்கை" என்னுஞ் செய்யுளில் நக்கீரனார் குறை கண்டபொழுது சங்கப் புலவர்கள் முன்பு நின்று வாது செய்தனர். முருகபிரானே சங்கப்புலவர்கள் எல்லாம் மாணவர்கள்போலத் தமது முன்பு நிற்கத் தாம் ஓரதிகாரியாய்ச் சாரதா பீடத்திருந்து அவர்களைச் சோதித்து வீற்றிருந்தனர். என்னே முருகன் தமிழ்ப் புலமைத் திறம் இருந்தவாறு! இக் கருத்தைப் பின்வரும் செய்யுள்களிற் காண்க :—

அரிய தாதை தானேவ - மதுரேசன்
அரிய சார தாபீட மதனிலேறி யீடேற
அகில நாலும் ஆராயும் - இளையோனே
—திருப்புகழ்-1055

" மூவர்கட் கரியான் நிற்ப முத்தமிழ்ச்சங்கத் தெய்வப்
பாலவர் வீற்றிருக்கும் பாண்டிநன் னாடுபோற்றி, "

" முருகன் சங்கத்திருப்பவன் நம் முக்கட் கடவுள்
நிற்பவன் "—திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்.

## 4. முருகபிரான் அருந்தமிழ்க் கீரனிடம் பெருந்தமிழ்ப் பனுவல்பெற்ற லீலை

இவ்வரலாறு திருவாலவாயுடையார் திருவிளையாடல், காளத்திப் புராணம், திருப்பரங்கிரிப்புராணம் முதலிய நூல்

களிற் சிற்சில வேறு பாடுகளுடன் காணப்படும். நிரம்ப அழகிய தேசிகர் பாடிய திருப்பரங்கிரிப்புராணத்தில் உள்ள வரலாறே முருகரது தமிழ்ப்பிரியத்தைத் தெள்ளிதிற் காட்டுகின்றபடியால் அதனையே இங்கு எடுத்துக் கூறுவோம்.

சங்கப்புலவர்களுள் தலைமைவாய்ந்த நக்கீரனார் சிறந்த சிவபக்தர். அவர் ஒரு விரதங்கொண்டிருந்தனர், அஃதாவது தாம் தெய்வமென்று வழிபட்டுத் தமிழ்ப்பாமாலை சூட்டுவது அங்கயற்கண்ணி (மீனாக்ஷி) பாகனும் சோமசுந்தரப்பெருமான் ஒருவருக்கே; தாம் மானிடனைப் பாடுவது தமிழ்ச்சங்கத்தை ஆதரிக்கும் மாறன் (பாண்டியன்) ஒருவனையே என்னும் விரதமே. அந்தோ பாவம்! விதிக்குத் தகுந்த மதி தானே! செந்தமிழ்க்கடவுளைப் பாடாத நாவும் நாவாகுமோ? குமாரக் கடவுளின் திருவருள் பெறாதார் தமக்குக் கொடுமை வருங்காலத்தை உணர்வரோ! உணரார்!

“கூடல், அங்கயற்கண் பாகனன்றி, மானிடரில்
மாறனன்றி அகிலந் தன்னுட்
துங்கமெழுந் தமிழ்மாலை தொடுப்பதிலை
என்று கொண்டான் தூயரேனும்
வெங்கொடுமை வருங்காலம் அறிகுவரோ
குமரனருள் மேவிலார்கள்”

இவ்விரதச் செருக்கால் இப்புலவர் பெருமான் முருகபிராற்கு ஒரு பாமாலையேனும் சூட்டினரில்லை. பிரமனைக் குட்டியடக்கிய செட்டிக்குக் கீரரையடக்குவது பெருங்காரியமோ? தம்மைப் புறக்கணித்த இத்தமிழ்ப்புலவரைத் தடுத்தாட்கொள்ள நினைத்த எம்பெருமான் அவரிடம் தமிழ்ப்பாமாலைபெற ஒரு சூழ்ச்சி செய்தனர். தமது கருத்தைக் குறிப்பாற் பக்கத்துறையும் நாரதருக்குத் தெரிவித்தனர். அவரும் அதை உணர்ந்து நக்கீரர் மதுரையினின்றும் திருப்பரங்

கிரிக்கு வருகின்ற சமயம் அறிந்து முருகபிரானுக்குத் தெரிவித்தனர். முருகரும் பூதகணங்களாகிய "உக்கிரன்", "அண்டாபரணன்" என்பவர்களை அழைத்துப் "பூதப்படை வீரர்களே! இந்த மூடனாகிய நக்கீரன் தினந்தோறும் மதுரையிலிருந்து நமது திருப்பரங்குன்றத்திற்கு வந்து தாமரை மலர்களால் அலங்கரிக்கப் பெற்ற சரவணப் பொய்கையில் நீராடிச் செல்கின்றவன் நம்மைத் தரிசனம் செய்யாமல், நாம் வேறு சிவம் வேறு என்ற பேதபுத்தியுடன், செல்கின்றான். அவன் பேதபுத்தியை அகற்றித் தடுத்தாட் கொள்ளவேண்டும். ஆதலால் அவனை நம்முடைய மலையின் முன் பாகத்தில் இருக்குங் குகையில் தள்ளி வாயிலை நன்றாக அடைப்பீர்கள்" என்று உத்தரவு அளித்தனர். பின்பு ஒரு நாள் திருப்பரங்குன்றத்துத் தீர்த்தக் கரையில் நக்கீரர் வழக்கப்படி சிவபூசை செய்துகொண்டிருந்தனர். அப்பொழுது பூதப்படைவீரர் நக்கீரரது தபோவலியினால் அவரிடம் செல்ல அஞ்சி, அவர் தவத்தை அழிக்க மாயோபாயத்தினால் அக்குளக்கரையில் இருந்த அரசமரத்தின் இலை ஒன்றைப் பாதி தண்ணீரிலும் பாதி கரையிலும் விழும்படி விடுத்தனர். அந்த இலை தண்ணீரில் விழுந்தபாகம் மீனாகவும், கரையில் விழுந்த பாகம் பக்ஷியாகவும் மாறி ஒன்றை ஒன்று இழுக்கக் கண்ட நக்கீரர் சிவபூஜையை விடுத்து இது என்ன அதிசயம் என்று மயங்கி, மீனும் பறவையும் படும் வேதனையை நீக்கக் கருதி, அவையிரண்டையும் பிரிப்பதற்காக, அவையிரண்டின் உடலையும் ஒன்றோடொன்று சேர்த்திருந்த நரம்பைக் கையாற் கிள்ளினர். நல்லது செய்யக் கருதிச் செய்த இச் செயல் அவர் எதிர்பாராத வண்ணம் தீமையாக முடிந்தது. ஏனெனில், அங்ஙனம் கிள்ளின உடன், மீனும் புள்ளும் துடிதுடித்துக் குருதி கக்கி இறந்துபட்டன. உடனே பூதங்கள் பாசக் கயிற்றினால் அவரைக்கட்டிக் குகையில் அடைத்து வாயிலை அடைத்துச் சென்றன.], இதனை,

'* * இரங்கிக் கையுகிராற் கிள்ளியிடக் கயலும் புள்ளும்
'குன்றியுடல் புரண்டுபுரண் டங்காந்து வாய்பிளந்து குருதி கக்கிப்
பொன்றிடுங்காற் கண்மூடித் துடித்தயர்ந்து குப்புறவே புலர்ந்த அம்மா;
அக்கணத்தில் உக்கிரன் அண் டாபரணன் பற்கடித்தே அழன்று சீறிக்
கக்குநகு அருவிதவழ் கடம்பனுறை பரங்கிரியிற் கடிய பாவம்
இக்கொலையாம் பாதகஞ்செய் தனையென்று வென்னறைந்து வெருவப் பற்றிப்
புக்கபெரு மலையின்மேற் குகையடைத்துப் பாறை கொண்டு புதைத்தார் மன்னோ!"

—என விளக்கினர் பரங்கிரிப் புராணமுடையார்.

குகையில் அடைபட்டார்; என் செய்வார் தமிழ்ப் புலவர். நெட்டுயிர்த்தார்; அயர்ந்தார்; சிந்தை நைந்து, சில நாள் அவ்விருட் குகையிற் காலங் கழித்தார். பின்னர் முருகன் திருவருளாலே, 'மயிலிமேலேறுங் கந்தனுக்குத் தமிழ் சூட்டாக் காரணமீதென்னும்' உண்மை அவர் மனத்தில் உதித்தது; உடனே சுவையூறுந் தமிழ் மாலை ஒன்று "உலகம்" என எடுத்துக் "கிழவோனே" என ஆற்றுப்புடையாகப் பாடி முடித்தனர். அன்றிரவு குமரவேள் நக்கீரனர் கனவிற் றோன்றி "அவனிதனிற் கிழவனென வரச் சிறிது நாளாம்" எனக் கூறி மறைந்தனர். நக்கீரர் உடனே விழித்து,

'என்று மிளையாய்' என வருமாறு:—

"குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருப்படையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய், என் உள்ளத் துறை"—

என்னும் அருமைப் பாடலைப் பாடினர். நமநாண்டவனும் தாம் கொண்ட காரியம் நிறைவேறிற்று என மகிழ்ந்து தமது வேலாயுதத்தாற் பாறையைப் பிளந்து பாவலரைக் குகையி னின்றும் வெளியேற்றினர். இந்தப் பாறைக்கு "வேலெறி பாறை" எனப் பெயர் வழங்கும் என்ப.

சேக்கிழார் பெருமானுக்குச் சிவபிரான் "உலகெலாம்" என முதலெடுத்துத் தந்ததுபோல முருகரும் நக்கீரருக்கு "உலகம்" என முதலெடுத்துத் தந்தனர் எனத் திருவாலவா யுடையார் திருவிளையாடற் புராணத்திற் கூறப்பட்டுள்ளது. இது—

"தலமகிழ் தமிழ்க்கு நல்ல தண்டமிழ் முருகன் சென்று
நலமுறு கனவிற் சொல்வான் நற்றமிழ் முருகன் நம்பேர்
பலமிகு தமிழி னுலோர் பாட்டாற்றுப் படையா நம்மை
உலகமென் றெடுத்துப் பாடென் றுள்ளுறை கொடுத்தா
னன்றே."

எனவரும் செய்யுளால் விளங்கும். இச்செய்யுளில் தமிழுக்கும் முருகருக்கும் உள்ள ஒற்றுமை "தமிழ்க்கு நல்ல தண் டமிழ் முருகன்", "நற்றமிழ் முருகன்" என்னுஞ் சொற் றொடர்களால் விளங்கும். இவ்வொற்றுமை "நற்றமிழ்க் கின்றுணை ஞான சம்பந்தன்" என்னுந் தேவாரத் திருவாக்கொடு ஒத்துணரற் பாலது. அருணகிரியாரும் "உலகம் உவப்ப" என முருகபிரானே முதல் எடுத்துத் தந்தனர் எனக் கூறியுள்ளார். இதனை,

"அடிமோனை சொற்கிணங்க "உலகா முவப்ப" என் றுன்
அருளா லளிக்குகந்த பெரியோனே"

எனவருந் திருப்புகழால் (203) அறியலாகும்.

புலவர் பெருமான் பாடிய தமிழ்க்கிரங்கி முருகர் வந்து உதவினர் என்பது—

" மலைமுகஞ் சுமந்த புலவர் செஞ்சொல் கொண்டு
வழி திறந்த செங்கை வடிவேலா"
—திருப்புகழ்-91

" கந்தன் குகன் என்றன்குரு என்றுந்தொழும் அன்பன்
கவி கண்டுய்ந்திட அன்றன்பொடு வருவோனே"—
—திருப்புகழ்-805

" நக்கீரரோதிய வளகைசேர் தமிழுக்காக நீடிய
கரவோனே —திருப்புகழ்-1191

கீத இசை கூட்டி வேதமொழி சூட்டு
கீரரியல் கேட்ட க்ருபைவேளே ;—திருப்புகழ்-1278

" பழுத்தமுது தமிழ்ப்பலகை யிருக்குமொரு கவிப்
புலவன்
இசைக்குருகி வரைக்குகையை யிடித்து வழிகாணும்''
—திருவகுப்பு

என வரும் திருவாக்குகளால் அறியக்கிடக்கின்றது.

இனி, அத் திருமுருகாற்றுப் படையின் சுவை எத் தன்மைத்து, அச்சுவையை எத்தனைப் ப்ரியமுடன் எம்பிரான் பருகினர் என்பது ஆராயற்பாலது. தேவசேனையின் கலவி யின்பத்திலும் கீரர் சொல்லே அதிகமாக முருகருக்குத் தித்தித்தது என்றார் அருணகிரியார்.

" கைம்மா மயில் செவ்வி நக்கீரர் சொல் தித்தித்ததே';
—கந்தரந்தாதி-51

கரும்பையும் அமுதையும் தேனையுங் கசப்பு என்று சொல்லும்படி அத்துணை இனிப்பு மிக்க வள்ளியின் தீஞ் சொல்லையும் மாற்றும் பெருமை வாய்ந்த தமிழை முருக

செவி தாழ்த்துக் கேட்டான்; அங்கிலை மனங் களிப்புற்றான் - என்கிறார் சிவப்பிரகாச சுவாமிகள்.—

"செம்மல்,
பன்னிரு செவியு மாரப் பருகமு தாகி ஒதில்
உன்னிய உன்னி யாங்கிங் குதவுவ தாகிப், பாவுள்
முன்னுற வந்து நிற்கும் முருகாற்றுப்படைமொழிந்தான்;
வள்ளி,கன்னலும் அமுதுந் தேனுங் கைக்குமின் றீஞ்சொல் மாற்றித்
தன்னிகர் புலவன் கூறுந் தமிழ்செவி தாழ்த்துக் கேளா
அங்கிலை மனங்களிப்புற் றறுமுகம் படைத்த கோமான்";

—காளத்திப்புராணம்

இனி, கவி புகலுக என்று முருகர் நக்கீரனார்க்கு அறிவித்தும் அவர் செந்தமிழ் கூறாத குறைபற்றி இடருற்றனர் என்பதும்—

"உனதின் புறுகவி புகலென் றருதின முற்றறி வித்திடவும்
உயர்செந் தமிழ்சிறி தறைகின் றிலனென ஒட்டு கவிப்புலவன்
இடருங் குகையுறு சிறையுந் தவிர்தரு நற்கவி சொற்றிடலும்
முனிவின் றெதிர்வரு முருகன் தணிகையின் முத்த மளித்தருளே."

எனவருந் திருத்தணிகைப் பிள்ளைத்தமிழால் அறியலாகும்.

[illegible]

## 5. ஔவைப் பிராட்டியிடம் முருகபிரான் தமிழ் கேட்க விரும்பிய லீலை

தமிழ் விரும்பும் குமரன் தமிழ்ப்பிராட்டியாம் ஔவையிடம் விளையாடாதிருப்பரோ? ஒரு நாள், நெடு வழி நடந்து இளைப்புண்ட ஔவையார் ஒரு நாவல் மரத்தடியில் அமர்ந்தனர். பசியும் வருத்திற்று. மரக்கிளை ஒன்றில் ஆயச் சிறுவன் ஒருவன் பழந் தின்றுகொண்டிருப்பதைக் கண்டார். "குழந்தாய்! எனக்குச் சில பழங்கொடு உண்பதற்கு" என வேண்டினர். ஆயச் சிறுவனு யமர்ந்த குழந்தைக் குமரரும் "அம்மே! சுடும் பழம் வேண்டுமோ சுடாப் பழம் வேண்டுமோ?" என வினவினர். இதைக் கேட்ட ஔவையார் "இஃதென்ன விந்தை! நாவற் பழத்திற் சுடும் பழம் எது? சுடாப் பழம் எது? இத்தனை நாளாய் நமக்குத் தெரியாதே; இதனை விளக்குக என வினவினுல் நமது அறியாமை புலப்படும்; சுடும் பழந் தருக எனச் சொல்லிப் பார்ப்போம்" என நினைத்து "அப்பா! சுடும் பழமே எனக்கு வேண்டும்" என்றனர். உடனே ஆயச் சிறுவனும் நன்கு பழுத்திருந்த நாவற் பழங்களைப் பார்த்துப் பார்த்துக் கீழே மண்ணின்மீது வீசினன். பழுத்த பழங்களாதலாற் கீழ் வீழ்ந்தவுடன் அவைகளில் மணல் ஒட்டிக்கொள்ள அவைகளை எடுத்து மணல் போக ஊதி ஊதி உண்ணவேண்டிவந்தது. அங்ஙனம் ஊதும் போதெல்லாம் ஆயச் சிறுவன் "அம்மையே! நீதானே சுடும் பழம் வேண்டும் என்றனை; பழஞ் சுடுகின்றதுபோலும்! சூடு தணிய ஊதுகின்றனைபோலும்!" எனக் கூறி நகைத்தனன். ஔவையார் இதனைக் கேட்டு ஆயச் சிறுவன் அறிவை வியந்து, "சிற்றுளியாற் கல்லும் தகரும்", என நினைந்து "எப்படிப்பட்ட புலவர்களை எல்லாம் வென்ற யான் இந்த சிறு பிள்ளையிடமா அவமதிப்பு உறவேண்டும்;" என நாணி

மனம் நொந்தனர். இதனைக்கண்ட அருந்தமிழ் விநோத அறுமுக வள்ளல் தமது சுயவடிவத்துடன் எதிர் தோன்றி நிற்க, ஔவையாரும் கீழ் வீழ்ந்து வணங்கி "பைந்தமிழ்த் தருவே! செந்தமிழ்த்துறையே! கூடல் புரந்தொருகால், கூடற் புலவரெதிர் பாடல் அறிவித்த படைவேளே! எனையும் ஒரு பொருளா மதித்து விளையாட்டுகந்த மாண்புடையோய்! தணிகை அண்ணலே! கருணை வெள்ளமே" எனப் பலவாறு துதித்தனர். இறைவனும் "தமிழ்க்கிழவி! நின்னுடன் கலா விநோதம் செய்ய வந்தோம்! இனியது எது கூறுக" என்றனர். ஔவையார் உடனே,

"இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்!
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள் ளோரைக்
கனவினும் நனவினுங் காண்பது தானே."

எனப் பாடி முடித்தனர்.

இதனைக்கேட்ட பிரான் "செந்தமிழ்ச் செல்வி; கொடியது எது" என வினவினர். உடனே ஔவைப் பிராட்டியார்,

"கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினுங் கொடிதிங் கவரையில்
லின்புற அவர்கையி லுண்பது தானே—' என்றனர்.

செவ்வேளும் "நன்குகூறினை, அரியது எது" கூறுக என்றனர். தமிழ் மூதாட்டியும்,

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரிதரிது மாநுட ராதலரிது
மாநுட ராயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்
தானமுந் தவமுந் தாஞ்செய்தல் அரிது
தானமுந் தவமுந் தாஞ்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே"

எனச் சதுருறக் கூறினாள். முருகபிரானும் "சபாஷ்! 'எது பெரியது, அதனையும் கூறிமுடிக்க," என்றனர். பிராட்டியாரும் பெருமிதத்துடன்,

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தி வந்தோன்
கரிய மாலோ அலைகடற் றுயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரன் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்

இறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமையைச் சொல்லலும் பெரிதே"
எனப்பாடினர்.

இதனைக்கேட்ட தமிழ்க்கடவுளும் ஔவைக்குப் பல ஆசி கூறி மறைந்தனர். தமிழ் மீதிருந்த தனிக்காதலன்றோ இங்ஙனம் முருகபிரானை விளையாடச் செய்தது. தொண்டர்தம் பெருமையைச் சொல்லலும் பெரிதே! என்ற பிராட்டி வாய் மொழியாலன்றோ அறுபத்துமூன்று நாயன்மார்களாம் தொண்டர் புராணத்துக்குப் "பெரிய புராணம்" என்னும் பெரிய பெயர் வாய்ந்தது.

6. முருகர் சம்பந்தராய்த் தமிழ் பரப்பிய லீலை

முருகவேள் சம்பந்த மூர்த்தியாகித் தமிழும் இசையும் நாடெலாம் பரப்பிய நற் சரிதத்தை ஒரு சிறிது கூறுவோம். திருஞானசம்பந்தப்பெருமானுடைய சரிதம் பெரியபுராணத் திற் காணலாகும். முருகபிரானது திருவருட்டோற்றமே சம்பந்தப் பெருமான் என்பதற்கு ஆதாரங்கள் பலவுள. அருணகிரிநாதரும் ஒட்டக்கூத்தருமே நமக்குப் போதிய சான்றுவார். சம்பந்தப் பெருமான் தமிழ்ப் பாக்கள் பாடிச் செய்த அற்புத லீலைகளை எல்லாம் முருகபிரான் இயற்றியன வாகவே அருணகிரியார் தமது திருப்புகழிலும், கந்தரந்தாதி யிலும் பாராட்டியுள்ளனர். தமிழ் சம்பந்தப்பட்ட வரையி லும் அருணகிரியார் கூறி மகிழ்ந்ததைக் கூறுவோம்;

" தம்பந்த மறத் தவநோற்பவர் குறைதீரச்-
சம்பந்த னெனத் தமிழ் தேக்கிய பெருமாளே"

"சுருதியாய், இயலாய், இயல்நீடிய
தொகுதியாய், வெகுவாய், வெகுபாஷைகள்
தொடர்புமாய், அடியாய், நடுவாய், மிகு துணையாய், மேல்

தறையுமாய், அறமாய், நெறியாய், மிகு
விரிவுமாய், விளைவாய், அருள் ஞானிகள்
சுகமுமாய், முகிலாய், மழையாய், எழு சுடர்வீசும்;

பருதியாய், மதியாய், நிறைதாரகை
பலவுமாய், வெளியாய், ஒளியாய், எழு
பகல் இரா விலையாய், நிலையாய், மிகு பரமாகும்-

பரம மாயையின் நேர்மையை யாவரும்
அறியொணாதகை நீகுருவாய் இது
பகருமாறு செய்தாய் முதனாளது பயனேதான்?

கருதும் ஆறிரு தோள் மயில் வேலிவை
கருதொணாவகை: ஓர சாய்வரு
கவுணியோர்குல வேதியனாய் உமை கனபாரக்-

களப பூண்முலை ஊறிய பாலுணு
மதலையாய் மிகுபாடலின் மீறிய
கவினனாய், விளையாடிடம் வாதிகள் கழுவேறக்-;

குருதியாறெழ வீதியெலாமலர்
நிறைதராய்விட நீறிட வேசெய்து
கொடிய மாறன்மெய் கூனிமிராமுனை குலையாவான்-

குடபுலியென மாமதுராபுரி
யியலை யாரண ஆறென நேர்செய்து
குடசை மாநகர் வாழ்வுற மேவிய பெருமாளே"

இங்ஙனம், உமை முலைப்பாலுண்டு சுருதித் தமிழ்க் கவிப் பெருமாளாகச் சம்பந்தப்பெருமான் செய்த திருவிளையாடல்களை முருகபிரானே இயற்றினவாகக்கூறி அருணகிரியார் பாராட்டியதுபோலக் கவிச் சக்கிரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரும் தாம் இயற்றிய தக்கயாகப் பரணி என்னும்

அருமை நூலிற் சம்பந்தர் சரிதத்தை முருகபிரான் சரிதமாக விளக்கமுற ஓதுவர். அந்நூலிற் கோயிலைப்பாடிய பகுதியிற் சரஸ்வதி தேவியை நோக்கிப் பார்வதிதேவி-

"வெண்டாமரையாளே! தெய்வமகளும், எனக்கு மருமகளும் ஆன வள்ளி என்னும் பெயருடையவளை மணஞ்செய விரும்பிய என் பிள்ளை முருகன் மதுரைமாநகரில் சமணரோடு வாது வென்ற கதையை எனக்குச் சொல்லுக," என்று கேட்டதாகவும் உடனே சரஸ்வதியும் அச்சரித்திரத்தைக் கூறினதாகவும் வரும் பாகம் படிக்கப் படிக்க மிக இனிமையாக இருக்கும். அது—

"வருகன்ற தெய்வ மகள என் மருமகள் வள்ளி வதுவை
மனமகிழ் பிள்ளை குமரன் மதுரையில் வெல்லும் இனிய
ஒருகதை சொல்லு! தவள ஒளிவரி செவ்வி முளரி
ஒளிதிகழ் அல்லி கமழும் ஒருமனை வல்லி எனவே"

எனவரும் பாவால் விளங்கும்.

தாம் இறைவன் திருவொளி ஆவதைச் சம்பந்த சுவாமிகளே, "கருக்குடி மைந்தன் தன்னொளியான மெய்ஞ்ஞான சம்பந்தன்"— என்னும் அருமை வாக்கால் விளக்குகின்றார். முருகபிரானும் இறைவன் ஒளிதானே!

இங்ஙனம் சம்பந்தராய்த் தோன்றிய முருகபிரானுக்குத் தமிழில் உள்ள புலமையும் காதலும் அவரருளிய அற்புத தேவாரங்களில் ஒவ்வொரு பதிகந் தோறும், ஒவ்வொரு பாடல்தோறும், ஒவ்வொரு அடிதோறும், ஒவ்வொரு சொற்றொடர்தோறும் விளங்கும் என்பது மிகையாகாது. செம்மை பழுத்த தமிழுக்கும், இயற்கை இன்பம் பெருகுந் தமிழுக்கும், பொருள் ததும்புந் தமிழுக்கும், இசைமலி தமிழுக்கும், பத்திச்சுவை சொட்டுந் தமிழுக்கும், சித்ரத் தமிழுக்கும், தெய்வத் தமிழுக்குஞ் சம்பந்தப் பெருமான் தமிழே தக்க இலக்கியமாகும்.

உதாரணங்கள்:—

(1) செம்மை பழுத்த தமிழ்: (முப்பழக் காட்சி)

“பக்கம் வாழைப் பாய்கனி யோடு பலவின்தேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி தூங்குங் குற்றாலம்.”

(2) இயற்கை இன்பம் பெருகுந்தமிழ்:

“மலர்மலி சலமொடு வந்திழி காவிரி
சலசல மணிகொழி சக்கரப் பள்ளியே”

‘விடமுண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் தண்புறவின
மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று
தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறைய
கடல்விண்ட கதிர்முத்தம் நகைகாட்டுங் காட்சியதே’.

(3) பொருள் ததும்புந் தமிழ்:

“செடிகள்நோ யாக்கையம் பாம்பின்வாய்த் தேரைவாய்ச்
சிறுபறவை
கடிகொள்பூந் தேன் சுவைத் தின்புற லாமென்று
கருதினையே.

(4) இசைமலி தமிழ்:

“பண்டேழுல குண்டானவை கண்டானுமு னறியா
ஒண்டீயுரு வானானுறை கோயில்”

“ஆறினொடு கீறுமதி யேறுசடை யேறன்”

“வண்ணமுகி லன்ன எழில் அண்ணலொடு சுண்ணமலி
வண்ண மலர்மேல்
நண்ணவனும் எண்ணரிய விண்ணவர்கள் கண்ணவன்”

“பாழியுறை வேழநிகர் பாழமணர் சூழுமுடலாளருணரா
எழினிசை யாழின்மொழி யேழையவள் வாழுமிறை
தாழுமிடமாம்”

(5) பத்திச்சுவை சொட்டுந் தமிழ் :

"எங்கள் பெருமானை இமையோர் தொழுதேத்தும்
நங்கள் பெருமானை நல்லூர் பிரிவில்லா
தங்கை தலைக்கேற்றி யாளென் றடிநீழல்
தங்கு மனத்தார்கள் தடுமாற் றறுப்பாரே."

6) சித்ரத் தமிழ் :

"துன்று கொன்றைநஞ் சடையதே
தூய கண்டநஞ் சடையதே
கன்றின் மானிடக் கையதே
கல்லின் மானிடக் கையதே
என்றும் ஏறுவ திடவமே
என்னிடைப் பலி யிடவமே
நின்றதும் மிழலை யுள்ளுமே
நீரெனைச் சிறிதும் உள்ளுமே"

பின்னும், ஒரு விசித்ரத் தமிழை ஈண்டுக் காட்டுவோம். குரங்கணின்முட்டத் தேவாரப் பா ஒன்று கீழ்வருமாறு உள்ளது.

"சூலப்படை யான்விடை யான்சுடு நீற்றான்
காலன்றனை யாருயிர் வவ்விய காலன்
கோலப்பொழில் சூழ்ந்த குரங்கணின் முட்டத்
தேலங்கமழ் புன்சடை யெந்தை பிரானே."

இது இயற்றமிழ் நான்கு சீராலமைந்த கலிவிருத்தப் பா. இப்பாடலிற் பெரிய உருவிற் காட்டிய தனை ஆர், ந்த், ஏ என்னும் எழுத்துக்களை நீக்கிப் பாடலைவாசிக்க அதுவெண்டளை பிறழாது, ஒரு நேரிசை வெண்பாவாகக் கீழ்க்காட்டியவாறு அமைகின்றது! இது * ஒரு விசித்ரமன்றோ?

---

* இத்தகைய விசித்திரங்கள் யான் எழுதிவரும் ஸ்ரீ சம்பந்தப் பெருமான் தேவார ஆராய்ச்சியிற் காட்டப்படும்.

"சூலப் படையான் விடையான் சுடுநீற்றான்
காலன் உயிர்வவ் வியகாலன்—கோலப்
பொழில்சூழ் குரங்கணின் முட்டத்தே லங்கமழ்
புன்சடை யெந்தை பிரான்."

(7) தெய்வத்தமிழ். சம்பந்தப் பெருமான் தமிழ் தெய்வத் தமிழ் என்பதற்கு—

"அணங்கமர் யாழ்முரித் தாண்பனை பெண்பனை யாக்கியமண்
கணங்கழு வேற்றிக் கடுவிடந் தீர்த்துக் கதவடைத்துப்
பிணங்கலை நீரெதிர் ஓடஞ் செலுத்தின வெண்பிறைபோ
டிணங்கிய மாடச் சிரபுரத் தான்ற னிருந்தமிழே"

என்னும் (நம்பியாண்டார் நம்பி) ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி போதிய சான்றாம்.

இனி, நமது ஆறுமுகத் திருஞான சம்பந்தருக்குத் தமிழின் மீதிருந்த ஆர்வம் அவர் தமது தேவாரத்தில் தமக்கும் தமிழுக்குங் கொடுத்திருக்கும் அடைமொழிகளாலும் விளங்கும். உதாரணமாக, "நற்றமிழ் ஞானசம்பந்தன்", "நற்றமிழ்க் கின்றுணை ஞானசம்பந்தன்", தமிழ்க்கிழமை ஞானன்: "அருந்தமிழ் சுற்றுமுற்றுமாயினான் அவன் பகர்ந்த சொற்கள்", "தண்தமிழ், மெய்த்தமிழ், தகுதமிழ், வண்டமிழ், நற்றமிழ், மிகுதமிழ், இன்தமிழ், தெரிதமிழ், சீரார்தமிழ், செந்தமிழ், விரிதமிழ், துளங்கில்தமிழ், குன்றாத் தமிழ், பெருகியதமிழ், இசைமலிதமிழ், பலஓசைத்தமிழ், ஆரா அருந்தமிழ், திருநெறிய தமிழ், நலங்கொள் தமிழ், ஞான மிக்க தண்டமிழ், பேரியல் இன்றமிழ்" —என வருவன காண்க. பின்னும், "பல ஓசைத் தமிழ் அவையும் உண்ணின்ற தோர்சுவையும்" எனவும் "தமிழின் நீர்மை பேசி" எனவும்

கூறுதலால் இவரைத் தமிழ்ச்சுவை பருகுங் கடவுள் எனல் மிகவும் பொருத்தமாம் என்க.

தமிழின் அருமை யாருணர்ந்தார் என வருந்துவது அறிவீனம், மதுரை மூதூர் நீரும் உணர்ந்தது, நெருப்பும் உணர்ந்தது அன்றோ! என்கின்றார் ஒரு புலவர்.

"யாரறிவார் தமிழருமை என்கின்றேன் என் அறிவீனம் அன்றோ உன் மதுரை மூதூர், நீரறியும் நெருப்பறியும்" —மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி.

சம்பந்தப் பெருமானது தமிழின் அருமையை உணர்ந்து நெருப்பு தன்னிடை இட்ட ஏட்டை வேகாமற் காத்தும், வைகை நீர் தன்னிடையிட்ட ஏட்டை எதிரேறச்செய்து காத்தும், உலகுக்குப் பெருவியப்பையளித்த திருவிளையாடலை இது குறிக்கின்றது. இவ்வண்ணம் எல்லாம் முருகபிரான் சம்பந்தராய்த்தோன்றி தமிழில் விளையாடினது இவ்வுலகிற் செந்தமிழைப் பரப்பவேண்டியே என்னும் உண்மை சுந்தர மூர்த்தி சுவாமிகள்—

"நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பு ஞானசம்பந்தன்".

"இருந்து நீர் தமிழோடு இசைகேட்கும் இச்சையால்
காசு நித்த னல்கினீர்"—

எனக் கூறுதலால் தெளிவுறப் பெறப்படும்.

## 7. முருகர் பொய்யாமொழிப் புலவர் பொருட்டு முட்டைப் பெயர் பெற்ற லீலை

பின்னும், முருகபிரானது தமிழார்வம் விளங்கும் சரிதம் ஒன்று விளக்குவாம். திருப்புகழ் பாடிய அருணகிரி நாதரது காலத்துக்கு முன்பு (பதினைந்தாவது நூற்றாண்

டுக்கு முன்பு) பொய்யாமொழிப்புலவர் என்னும் கவிஞர் பெருமான் ஒருவர் இருந்தார். அவர் சிவபெருமான் ஒரு வரையே பாடுவேன் ; ஏனை எத்தெய்வத்தையும், எவரையும் பாடேன் என ஒருவிரதம் பூண்டிருந்தனர். இவ்விரதச் செருக்கால் இவர்—

செம்மைய ஞான சத்தித் திருவுருக்கொண்ட செம்மல்
எம்மின்வே றல்லன் யாமும் அவனின்வே றல்லேம்
கண்டீர்
அம்மழ வடிவினன்பால் அன்புசெய் தவர்பிழைத்தோர்
நம்மிடைத் தொண்டு செய்தோர் நவைபடப் பிழைத்
தோராவர்.

எனச் சிவபிரான் சொல்லிய சொல்லின் உண்மையை உணரா தவராகிச் "சிவபிரானாகிய கோழியைப்பாடும் எனது நா சிவகுமாரனாகிய ஒருகுஞ்சுக்குப் பாமாலைசூட்ட ஒருப்படுமோ? ஒருப்படாது" என முருகபிரானையும் புறக்கணித்து இறுமாந் திருந்தார். 'ஆணவ அழுக்கடையும் ஆவியை விளக்கி யநுபூதி அடை' விக்கும் அருள் ஊற்றை என்றும் பெருக்கும் அறுமுகப் பெருமான் இப்புலவருக்கு நல்லறிவூட்டி யாட் கொள்ள நினைத்தனர். அங்ஙனம் நினைத்த திருவிளையாடற் பயனால், புலவருக்கு வறுமை ஏற்பட்டது.

"வடிவுந் தனமும் மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா!
அடியந் தமிலா அயில்வேல் அரசே!
மிடியென் றொருபாவி வெளிப்படினே"-

என்னும் அருணகிரியார் வாக்கு பொய்க்குமோ! வேறொருவரைப் பாடேன் என்றிருந்த மனமுங் குணமும்

உடனே மாறின. புலவருக்குக் கொடுப்பதிற் கற்பகத்தருவைப் போன்ற தஞ்சைநகரத்து அரசன் ஒருவனைப் பாடினர்; நிரம்பப் பரிசு பெற்றனர். தஞ்சையினின்றும் மதுரைக்குப் போய்த் தமிழ்ச் சங்கத்தை நிலை நிறுத்தலாம், பாண்டியனிடம் கண்ணியம் பெறலாம், என நினைந்து பரிசிற் சுமையுடன் பாலைநிலத்தின் வழியாக வெயிலின் கொடுமை தாளமுடியாது வழிநடந்தனர். இதுவே சமயம் என எழில்வேல் இறையும் ஒரு வேடராக வந்து வழிமறித்தனர். பாவலர் பயந்து "ஓஹோ! நாம் சிவபிரானன்றி வேறொருவரைப் பாடுவதில்லை எனக்கொண்ட விரதம் தவறி வேந்தன் ஒருவனைப் பாடிய பிழையின் பயனே இவ்வேடன் கைப்பட்டோம்" எனத் திகைத்தனர். வேடனும் "நீயார்" எனவெருட்டி வினவினன். பொய்யா மொழியாரும் அச்சத்தால் நா குழற "நான் ஒரு புலவன்" என்றனர். "புலவன் எனில், என்பெயரை வைத்து ஒரு வெண்பா பாடுக" என்றனர் வேட வேடங் கொண்ட செவ்வேள். பொய்யா மொழியாரும் ஏதேது! இந்த வேடனுக்குத் தமிழ்ப்பாவின்மீது காதலுள்ளதே என மனத்தில் நினைத்து வியந்து, 'நின்பெயரைக் கூறுக' என்றனர். வேடனும் என்பெயர் "முட்டை" என்றனன். புலவரும் உடனே

"பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலு
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு"

என்னும் எதுகை நயஞ்சிறக்கும் பாடலைப் பாடினர். இப் பாடலைக் கேட்ட வேடன் "நீயா புலவன்! உன் பாடலிற் பொருட் குற்றம் உளது. முதலடியில் வெயிலின் கொடுமையாற் கள்ளிச்செடி சூடுண்டு பொறி பறக்கின்றது என்றனை;

ஈற்றடியில் "கானவேல் முள் தைக்கும்" என்றனை. பால் நிறைந்த கள்ளிச்செடி சூடேறிப் பொறி பறக்கும் அந்தப் பெரு நெருப்பில், வேலமுள் எங்ஙனம் தைக்கும்? வேலமுள் எல்லாம் சாம்பராய்த் தீய்ந்திருக்கும் அல்லவா? என்றனன். இதைக் கேட்ட புலவர், வேடன் சொல்வது உண்மைதானே, என அறிந்து திகைத்தனர். வேடனும் "விழித்த விழிகட்குத் திக்குகள் போதா என ஏன் விழிக்கின்றனை? உன் பெயரைச் சொல்லு, நான் பாடுகின்றேன்" என்றனன். புலவரும் தன்பெயர் "பொய்யாமொழி" என்றனர். வேடனும் "ஓஹோ! பொய்யாம் மொழியோ! உன் பெயர்" எனக்கூறி நகைத்து,

"விழுந்த துளி யந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்து சுடர்சுடு மென்றுஞ்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்துப் பெய்வளையும் போயினளே
பொய்யா மொழிபகைஞர் போல்"

என்னும் அரிய பாடலைச் சொன்னான். இப்பாடலைக் கேட்ட புலவர், வேடன் (வேள் தன்) திருவுருவோ இவ்வேடன் திருவுரு எனப் பிரமித்து வேடன் திருவடியில் வீழ்ந்து வணங்கினர். வேட்டுவ வேடங்கொண்ட செவ்வேளும் "அன்ப! அஞ்சற்க, கோழியைப் பாடின நா குஞ்சினைப் பாடாது என்ற விரதம் பூண்டனையே. உன் விரதம் என்னாயிற்று? இப்போது முட்டையையும் உன் நா பாடிற்று அன்றோ! உனது ஆணவ மலத்தை ஒழித்தற் பொருட்டே ஈண்டு இவ்வுருவுடன் தோன்றினம். இனி உண்மை அறிந்து உய்க" என உபதேசித்து அவர் நாவில் வேல்கொடு ஆறெழுத்தைப் பொறித்து மறைந்தனர். இது கீழ்வரும் திருப்புகழாதிய நூல்களால் அறியக் கிடக்கின்றது.

"கற்றுவிற் காட்டிக் கரைதுறை
நற்றுயிற் காட்டிப் புகழ்கலே
கற்றூர்சொற் கேட்கத் தனிவழி வருவோனே"

—திருப்புகழ்-1022.

'குறமகள்மேல் மால்,

"முற்றிச்கிரி வெற்றிக் குருபர
முற்பட்ட முரட்டுப் புலவனை
முட்டைப் பெயர் செப்பிக் கவிபெறு பெருமாளே"

—திருப்புகழ்-1171.

'பொய்யா மொழிப் புலவர் மதுரையிற் சங்கம்
புரக்க எழுநாள் மறவனுப்ப்
புறவுற வளைத்தெனது பெயர் முட்டை பாடெனப்
'பொன்போலும்' என்று பாட
வெய்யான பாலைக்கி தேலாது நும்பெயர்
விளம்பென விளம்ப அவர்மேல்
'விழுந்த துளி.' என்றெடுத் துப்பாடி அவர் நாவில்
வேல்கொடு பொறித்த சதுரா!

(திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்)

"பொய்யா மொழியைப் பழிக்கும் ஒரு தமிழ்க் குதலைப்
பசுங் குருந்தைப் புரக்க"

—[சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்]

மேற்காட்டிய திருப்புகழிற் பொய்யாமொழிப் புலவரை அருணகிரியார் "முரட்டுப் புலவன்" எனக் குறித்தது இத் திருவிளையாடல் பற்றியே. ஒரு வெண்பாவைத் தமிழில் பெற விரும்பி யன்றோ வெய்ய பாலைநிலத்தில் வேடனாய் நின்றனர் முருகபிரான்! என்னே அவர் தம் தமிழ் அவா?

"வேடுவனாய் ஓர் புலவன் வெண்பாவைக் கைக்கொண்டு
கோடு திரியுங் குறச்செட்டி"

—எனவரும் தணிகைஉலா ஈண்டு நினைவுக்கு வருகின்றது.

பொய்யா மொழியாருடன் செய்த இந்த லீலையால் முருகவேளுக்கு "முட்டை" என்னும் திருநாமம் (பெயர்) ஒன்று கிடைத்தது.

"கூன்வயிறன், முட்டைக்கு மூத்தோன் கரிமுகன் தான் வந்து முன்னிற்கவே" என்பது தனிப்பாடல்.

மெய்ஞ்ஞானம் பெற்ற பொய்யாமொழியாரும் முருகபிரானுக்குரிய மெய்யன்பர்களுள் ஒருவராய் விளங்கி நின்றனர். இதுபற்றியே, திருத்தணிகை உலாவில், முருகபிரான் திருவோலக்கங்கொண்டு வீதியில் திருவுலாப் போத எழுந்தருளியபோது உடன் போந்த சிறந்த அடியர்களுள் நக்கீரர், அருணகிரியாருடன் ஒப்பப் பொய்யாமொழியையுஞ் சிறப்பித்துக் கூறப்பட்டுளது.

"ஓதுகிளி யாயிருந்த உத்தமனும்—ஆதிமுரு
காற்றுப் படையியம்பி அங்கமுறு வெங்குட்ட
மாற்றிச் சுனைமுழுகு வண்கவியும்—தோற்றியென்பேர்
முட்டையென வைத்து முதிர் சுரத்தைப் பாடுகெனத்
திட்டமுடன் ஓர்வெண்பாச் செய்தோனுங்—கிட்டிவர."

இது முருகர் தமிழ்கேட்கத் தனிவழி வந்த சரிதம்.

## 8. முருகபிரான் அருணகிரியாரிடம் பதினாறாயிரம் பாடல் பெற்ற ஆடல்.

'சம்பந்தனெனத் தமிழ் தேக்கிய பெருமானுக்கு ஒரு வெண்பா போதுமா? ஆதலால், அப் பொய்யாமொழிப் புலவரையே மேற்பிறப்பில் அருணகிரி நாதராகத் தோற்று வித்து எண்ணில சந்தப் பாடல் அவரிடம் முருகபிரான் பெற்றனர் என ஆன்றோர் கூறுவர். இது சிதம்பர முனிவர் அருளிய க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழில்

"*****பொய்யா மொழிப் புலவராய்—

'பொன்பா' எனுங்கவியுன் முன்பாட உன்பாடல்
பூவுலகி லேகொண்டுமேற்

கருப்பவம் அகற்றவரும் அருணகிரி நாதராய்க்
கந்தநின் னருள் பெற்றபின்
கற்பகக் கனிரசக் கடலமுத வாரிதென் கடலென
மகிழ்ந்து பாடுந்

திருப்புகழ் முழக்கமணி யிராது செவியனே
சிறுபறை முழக்கி யருளே!
தென்னருணை வளர்கோபு ரத்துவாழ் முருகனே
சிறுபறை முழக்கி யருளே!"

எனவரும் பாடலால் அறியக் கிடக்கின்றது. தமிழ் மீதிருந்த ஆர்வத்தினாலன்றோ தவங்கிடந்த அருணகிரியாருக்கு முருக பிரான் குரு உருவமாய்த் தோன்றி, வேல் கொடு அவர் நாவிற் பொறித்து, 'முத்தைத் தரு' எனவரும் முதற் சந்தமும் எடுத்துதவினர். இது

"மாதரிரு விழியாகும் அம்புக்கும் மதனவேள்
வாளிக்கும் நடுவாகியே
மாலாகும் அருணகிரி நாதரரு ணைச்சிகரி
டைவாச விற்பயில நம்
பாதமலர் பாடுநீ யென்ன அடியேனுமெப்
படிபாட என்ற அளவிற்
பக்திதரு முத்திநகை யத்தியிறை வீரவெனப்
பாடென்று சொல்லி யியலாற்
பூதலமும் எங்கிளையும் ஈடேற நாவிற்
பொறித்தவ ருரைத்த கவிதைப்
புத்தமுது பன்னிரு செவிக்குநிறை யக்கொண்டு
போதமு னளித்தருளினாற்
சீதள மலர்ச்சரணம் உதவுகர னாராளி
சிறுதே ருருட்டி யருளே
செயசெயென அமரர்தொழ அசுரர்முடி சிதறுமுநி
சிறுதே ருருட்டி யருளே."

'அருணகிரி நாதரையுங், கவிசொலென் றேயடி யெடுத்துக்
கொடுத்தவன் கனிவாயின் முத்தமருளே.

'குருவாக வந்தருண கிரியைத் திருப்புகழ்க் கூறென
முதற் சந்தமும்
திருவாய் மலர்ந்துரை செய் குமரகுரு நாதனே
சிறுபறை முழக்கி யருளே.'

"ஆசிலாப், பாவில் அருணகிரி பைந்தமிழின் மாரிபெய்ய
நாவிற் றிருப்பெயரை நட்டோனை"

எனவரும் திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், திருமலை முருகன் பிள்ளைத்தமிழ், க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழ், இலஞ்சி முருகன் உலா என்னும் நூல்களால் விளங்குகின்றது.

அமுத கவித் தமிழ்ப் பாமாலையே தன்னை யாண்டருளிய முருகபிரானுக்கு உகந்தது என்றறிந்து அருணகிரியார் "முருகா! எனக்கு வேண்டிய வரம் யாதென்று வினவில், நீ காழிவேந்தாகத் தோன்றி அமிர்தகவிப் பாடல்களைச் செந்தமிழில் அருளியவாறு உனதருளால் அடிமையும் அமிர்த கவிப் பாமாலை உன்மீது பாடவேண்டும்"—என்னும் வரமே என்றனர். "*புகலியில் வித்தகர் போல, அமிர்தகவித் தொடைபாட, அடிமைதனக் கருள்வாயே" என இவர் வேண்டியவுடனே "வேண்டும் அடியர் புலவர், வேண்ட அரிய பொருளை வேண்டு மளவி லுதவும்" பெருமானும் அங்ஙனமே கடைக்கண் பாலித்துத் திருவாக்கு உதவ, கடல்மடை திறந்தாற்போலத், தமிழ்ச்சுவை ததும்ப, பத்திச் சுவை பெருக, சந்த இன்பம் பொலிய, தாளஒலி துலங்க, "உதிருங் கனியை நறும்பாகில் உடைத்துக் கலந்து தேனை வடித் தூற்றி அமுதின் உடன் கூட்டி ஒக்கக் குழைத்த ருசிபிறந்து மதுரங் கனிந்த திருப்புகழ்ப் பா" மாலைகளைப் புனைந்து முருகன் திருவடிக்குச் சூட்டினர். இவர் பாடிய பாவடி ஏட்டில் முருகன் திருவடி பொலிந்து படிந்ததென்க. "மயிலிலும், தேவர் தலையிலும், என் பாவடி ஏட்டிலும் பட்டதன்றோ ** சிற்றடியே" எனமகிழ்ந்தனர் அருணகிரி யாரும்.

ஆண்டவன் அருளினாலே அரிய செந்தமிழிற் பாக்கள் வேண்டியபடியே பாடும் வித்தக அறிவு கிட்ட அருணகிரியார் பேரானந்தம் அடைந்து,

—குக! பூர்வ
பச்சிம தக்ஷிண உத்தர திக்குள
பக்தர்கள் அற்புதம் என ஓதும்

* புகலியில் வித்தகர்—ஞானசம்பந்தப் பெருமான்.

சித்ர கவித்துவ சத்த மிகுத்தத்
திருப்புக ழைச்சிறி தடியேனுஞ்
செப்பென வைத்துல கிற்பர வத்தெரி
சித்த அநுக்ரக மறவேனே—

என முருகன் கருணையை வியந்து பாடிப்பாடி மகிழ்ந்தனர்.

அருணகிரியாரிடம் தமிழைக் கேட்டுருகிய தமிழ்க் கடவுள், தமது தந்தையார் இருவர் தமிழுக்கு உருகி திருவீழிமிழலை என்னுந் தலத்திற் படிக்காசு தந்ததுபோலத், தாமும் அருணகிரியாருக்குப் படிக்காசு அளித்தார் என்னும் விஷயத்தைச் 'சென்னிமலை யாண்டவன் காதல்' என்னும் அருமையான நூல் செவ்வனே விளக்குகின்றது. இதனை அந்நூலில் உள்ள—

'பச்சைமயி லான்சூரைப் பாயுமயி லான்சேரும்
இச்சைமங்கை வாரணத்தான் ஏறுமங்கை வாரணத்தான்
நாட்டில் அருணகிரி நாதன் திருப்புகழ் சொல்
பாட்டின் மகிழ்ந்து படிக்கா சளித்த பிரான்
காலமிகுஞ் சென்னிமலை தன்னில்வளர் கல்யாண
வாலசுப்ப ராயனென்று வாணர்புகழ் வாசலினான்,—

என்னுங் கண்ணிகளிற் காண்க.

அப்பர் சுவாமிகளுக்குஞ் சம்பந்தப் பெருமானுக்குஞ் சிவபிரான் திருவீழிமிழலையிற் படிக்காசு தந்தது அவர்களிடம் தமிழ் கேட்கும் இச்சை காரணம் பற்றியே என்று ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது தேவாரத்தில்—

"இருந்துநீர் தமிழோ டிசை கேட்கும் இச்சையால்
காசு நித்த நல்கினீர்
அருந்தண் வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே"

என்னும் பாசுரத்தில் விளக்கியுள்ளனர்.

ஆகவே, இந்தத் தமிழ்ப் பித்து பிறைசூடிப் பித்தருக்கும் உண்டு; அவர் மகனார் முருகனாருக்கும் உண்டு; எனவே இது அவருக்குப் பரம்பரைப் பித்து என்க. அதனாலன்றோ தன்னை முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பான் முருகன் என்று அருணகிரியார் வெளியிடுகின்றனர். இதனை

"மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழ வைப்போன்"

என்னும் கந்தரலங்காரச் செய்யுளிற் காண்க.

தமிழின் சிறப்பை அருணகிரியார் பலவகை அடைமொழிகளைத் தந்து தமது திருப்புகழில் விளக்கியுள்ளார்.

அவை தம்முட் சில பின்வருமாறு :—

தெள்ளுதமிழ், சந்த செந்தமிழ், கனத்த செந்தமிழ்,
பல்கு தமிழ், முதியமா தமிழ், ஏழிசைத் தமிழ்,
பெரிய தமிழ், வழுதியர் தமிழ், சுத்தச் சித்தித்தமிழ்,
அரிய தமிழ், சித்ரத் தமிழ், புகலரியதான தமிழ்
அண்டர்கள் அறியா முத்தமிழ்.

## 9. முருகபிரான் கந்தபுராணம் தந்த வரலாறு.

காஞ்சிமாநகரில் உள்ள முருகன் ஆலயமாகிய குமர கோட்டத் தமர்ந்த குமரவேளின் திருவருள் பெற்றவரும், அப்பிரானுக்குப் பூஜை செய்யும் புண்ணியம் வாய்க்கப் பெற்றவரும் ஆகிய அர்ச்சகராகிய கச்சியப்ப சிவாசாரியர் என்னும் அன்பரின் கனவில் முருகபிரான் தோன்றி, 'அன்ப! நமது புராணத்தைத் தமிழிற்றருக', எனக் கட்டளையிட்டுத் "திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்" என முதலடியும் எடுத்துத் தந்து மறைந்தனர். சிவாசாரியரும் புளகிதம் உற்று விழித்து,

என்னே! இறைவன் திருக்கருணை இருந்தவாறு என மகிழ்ந்து, புராணத்தைப் பாடத் தொடங்கி நித்தமும் தாம் எழுதிய ஓலைச் சுவடிகளை இறைவன் சந்நிதியில் அர்த்தஜாம பூஜை முடிந்ததும் வைத்துத் திருக்கதவம் மூடுவர். காலை பூஜைக்குச் செல்லும்போது தாம் எழுதிய பாடல்களில் இறைவன் செய்துள்ள திருத்தங்களைக் கண்டு மகிழ்வர். இவ்வாறு நாலை முடித்து அதனை அரங்கேற்றத் தொடங்கி முதலடியை எடுத்துக் "திகட சக்கரம்" என்பதைத் "திகழ்-தசக்கரம்" எனப் பிரித்துப் பொருள் சொல்லுங் காலத்துச் சபையில் இருந்த ஒரு புலவர் திகழ் தசக் கரம்-திகடசக்கரம் என வருவதற்கு இலக்கண சூத்திரம் யாதோ எனத் தடை செய்ததாகவும், அதற்கு இவ்வடி முருகபிரான் திருவாக்கு, அவரே இதற்குச் சமாதானம் கூறுவர் எனச் சிவாசாரியர் விடை தந்ததாகவும், அடுத்தநாள் சபை தொடங்குமுன் சபையில் முருகபிரான் ஒரு புலவர் வேடத்துடன் தோன்றி இலக்கண நூலினின்றும் சான்று காட்டிச் சபையை மகிழ்வித்ததாகவும் சரிதங்கூறும். தமிழில் ஈடுபட்டன்றோ முன்பு வேடரூபங் கொண்டு வந்த வேள் இப்போது புலவர் உருத் தாங்கினர். அவர் திருவருள் நிரம்பியிருந்த காரணத்தாலன்றோ கந்த புராணம் செந்தமிழ்ப் புராணங்களுட் சிறந்து விளங்கு கின்றது. அந்தகக்கவி வீரராகவர் தாம் இயற்றிய சேயூர் முருகன் பிள்ளைத் தமிழில் அம்புலிப் பருவத்தில், அம்புலி! நீ முருகனிடத்து வந்தால் இன்ன இன்ன தமிழ் நூல் கேட்டு மகிழ்ச்சி பெறலாம் எனக் கூறும்போது, கந்தபுராணத்தைப்

"பொருஞ்சூ ரனைப்பொருங் கதைமுதற் கந்தப்
புராணக் கடற் காணலாம்"

என விசேடமாக விளக்கி எடுத்தோதினர். செந்தமிழ்ப் புராணங்களுள், ஒன்பது புராணங்கள் மிகச் சிறந்தன என

ஆன்றோர் கூறுவர். அவை தம்முள் ஒன்று கந்தபுராணம், இவ்வொன்பது புராணங்களாவன :—

| | |
|---|---|
| கந்த புராணம், | சேது புராணம் |
| பெரிய புராணம், | காளத்திப் புராணம் |
| திருவிளையாடற் புராணம், | கோயிற் புராணம் |
| காஞ்சிப் புராணம், | தணிகைப் புராணம் |

திருக்குற்றாலத் தல புராணம்

---

## சிவப்ரகாச சுவாமிகளுக்குத் தமிழில் வெற்றியளித்தது.

முருகர் தமிழ்ப்பிரியர் ஆயிற்றே; இரண்டு தமிழ்ப் புலவர்கள் வாது செய்யும்பொழுது யார்மாட்டிருப்பர் அவர் எனின் கூறுதும். ஆணவ அழுக்கு அடைந்தார் மாட்டு இரார், ஆணவம் ஒழிந்தார் மாட்டே இருப்பர் என அறிக. இதற்குச் சான்று சிவப்ரகாச சுவாமிகளின் சரித்திரத்தில் ஒரு பகுதியால் விளங்கக்கிடக்கின்றது. சிவப்ரகாச சுவாமிகள் திருச்செந்தூர் முருகவேளைத் தரிசித்துப் பிரதக்ஷிணம் வரும்போது ஆங்கிருந்த தமிழ்ப்புலவர் ஒருவர் சுவாமிகள் திருநெல்வேலி சிந்துபூந்துறையில் தருமபுரவாதீனத்து வெள்ளியம்பலவாண சுவாமிகளிடம் பாடங் கேட்டவர் என அறிந்து, தமது வழக்கப்படியே வெள்ளியம்பலவாண சுவாமிகளைத் தூஷிக்கச், சிவப்ரகாச சுவாமிகளுக்கும் திருச்செந் தூர்த் தமிழ்ப் புலவருக்கும் வாது ஏற்பட்டது. புலவர் நாம் இருவரும் நிரோட்டக யமகம் பாடுவோம், முன்னர்ப் பாடி முடித்தவருக்கு மற்றவர் அடிமையாதல் வேண்டும் என்றனர். சிவப்ரகாச சுவாமிகளும் அதற்கு உடன் பட்டனர். நிரோட் டகமாவது பாடலைப் பாடும்போது பாடுவோரது உதடுகள்

ஒட்டாவகைக்குள்ள எழுத்துக்களை வைத்துப் பாடுவது. ப, ம, வ, உ, ஒ, முதலிய இதழ் ஒட்டும் எழுத்துக்களும், இதழ் குவியும் எழுத்துக்களும் வாராவகைப் பாடல்கள் அமைய வேண்டும். ஆதலால் இவ்வகை அந்தாதி நிரோட்டக அந்தாதி, இதழகல் அந்தாதி எனப் பெயர்பெறும். செந்தூர்ப் புலவர் ஒரு செய்யுள் பூர்த்திசெய்யு முன்னே சிவப்ரகாச சுவாமிகள் "திருச் செந்தில் நிரோட்டக யமக அந்தாதி" என்னும் 30-பாடல்கள் கொண்ட அந்தாதி நூலைப் பாடி முடித்தனர். புலவரும் அடிமையாயினேன் என வணங்கினர். வெள்ளி யம்பலவாண சுவாமிகளிடமும் சென்று வணங்கி அடிமையா யினர். இந்த இதழகலந்தாதியில் ஒரு செய்யுளை எண்டெடுத்து எழுதி அதன் பொருளையுங் காட்டுவோம். எவ்வளவு அருமை யாகவும், எளிதாகவும், இன்பம் பயப்பதாகவும் இருக்கின்றது, பாருங்கள் :—முருகன் திருவருள் கலவாவிட்டால் அத் தமிழ் அத்துணை அழகாயிருக்குமோ? இராது. இது திண்ணம்.

கணக்காக நாய்கடின் காய நிலையெனக் கண்ணியென்ன
கணக்காக நானலைந் தெய்த்தே னெழிற்செந்திற் கந்தநெற்றிக்
கணக்காக ஞர்தந்த நின்றனை யேயினிக் காதலினற்
கணக்கா கனிகர்த் தேயழி யங்கத்தின் காதலற்றே.

[கணம்—கூட்டமான, காகம்—காகங்களும், நாய்கள்—நாய்களும், தின்—தின்னும்படியான, காயம்—இவ்வுடலை, நிலையென— நிலைநிற்கும் என, கண்ணி—நினைத்து, என்ன கணக்காக நான் அலைந்து, எய்த்தேன்—இளைத்தேன்; எழில்—அழகிய, செந்தில் கந்த! நெற்றிக்கண், அக்கு ஆகனர்—எலும்பணிந்த உடலினராகிய சிவபிரான், தந்த நின்றனையே, இனி, காதலினல்—அன்பு கலந்து, கண—கண்ண-நினைக்க (வரந்தந்து), கா - காத்தருள், கன - கனவை,

நிகர்த்தே - ஒத்து, அழி - அழிகின்ற, அங்கத்தின் காதல் தேகாபிமானம், அற்று - நீங்கி.]

செந்தூர்க் கந்த! இத்தேகம் அழிவது ஆதலின் இத் தேகத்தின் மீதுள்ள காதலற்று உன்மீது காதல் நிரம்பும் வகை வரந்தந்து காத்தருள் என்பது கருத்து.

சிவப்பிரகாச சுவாமிகளுக்குத் தமிழ் மீதிருந்த காதலுக்கு அளவே கிடையாது. இது அவர் பிரானிடம் கேட்கும் வரத்தினின்றும் ஏற்படுகின்றது. "விடையேறும் பெருமானே! பிறவாமை என்னும் வரத்தை நின்பால் வேண்டுநர் வேண்டுக; அடியேன் கேட்கும் வரம் யாதெனில் மதுரம் பெருகும் தமிழ்ச்சொன்மலர் மாலை உனக்கு அணியும் பாக்கியமுள்ள பிறவியே வேண்டும் என்பதே.

"விரை விடை யிவரும் நினைப்பிற வாமை வேண்டுநர்
வேண்டுக மதுரம்
பெருகுறு தமிழ்ச்சொன் மலர் நினக் கணியும்
பிறவியே வேண்டுவன் தமியேன்."

## 1 [illegible]. ஊமைப்பிள்ளைக்கு ஒப்பில் புலமை உதவிய திருவிளையாடல்

ஈண்டுக் கூறிய ஊமைப்பிள்ளை ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள். திருச்செந்தூர் முருகன் திருவடிக்கே தவம் பூண்ட தந்தை தாய்க்குத் தோன்றிய இவர் ஊமைப் பிள்ளையா யிருக்க, பெற்றோர் மனம் வருந்தி இங்ஙனம் ஒரு பிள்ளையைத் தந்த இறைவனிடமே அப்பிள்ளையை ஒப்படைத்துவிடுவோம் எனத் துணிந்து அங்ஙனமே திருச்செந்தூர்க் கோயிலிற் பிள்ளையை விட்டகன்றனர். தனித்து வருந்தி உறங்கும்

பிள்ளையின் பூர்வ புண்ணியங் கைகூட, " யார்க்கு முன்னவனே முன் நின்றால் முடியாத பொருள் உளதோ ?" என்னும் திருவாக்கை உண்மைப் படுத்த, செவ்வேற் பெருமான் ஊமைப் பிள்ளையின் கனவிற் றோன்றி "நீயார்" என்றனர். அவனருள் கூடலும் பிள்ளையும் வாய்திறந்து " அடியேன் " எனவர்க்கமைந்து பதில் அளித்தது. இறைவனும் அப்பிள்ளைக்குத் தென்மொழி வடமொழிகளின் இயல் எல்லாம் உணரப் போதித்து, இலக்கிய உணர்ச்சி கூட்டுவித்துப், பொய்யில் புலமை தந்து, கடல் மடைதிறந்தா லன்ன கவித்திறம் அளித்து, மழை பொழிந்தாலன்ன ப்ரசங்கம் நிகழ்த்தும் பேராற்றலும் ஈந்து, திருவடி சூட்டி, வெண்ணீறு நல்கி,

" அறிவு மறி தத்துவமும் அபரிமித வித்தைகளும்
அறிவென இமைப் பொழுதின் வாழ்வித்த
வேதியனும் "—

என்னும் அருணகிரியார் திருவாக்குக்கு இலக்காக்கினர். இவை,

" *மருவிய நீயார் என்ன வாய்திறந் தடியேன் என்ன
**இருமொழிகட் குள்ள இயலெலாம் உணரச் சாற்றி
பெருகிலக்கியமுங் கூறிப் பிறழ்தராப் புலமை செய்து
கடன் மடை திறந்தா லென்னக் கவிபுகல் வாக்கு நல்கி
அடல்கெழு பிரசங் கத்தின் அமைபெருஞ் சிறப்புநல்கி
** பதமலர் சென்னி சூட்டி ** திருந்து வெண்ணீறு நல்கி
திருவுருக் கரந்தான் ஐயன்"—என வருவதால் விளங்கும்.

இங்ஙனம் இருமொழிகளிலும் புலமை கிடைக்கப் பெற்றும், " தம்மல ரடியொன் றடியவர் பரவத் தமிழ்ச்சொலும்

---

* மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை யவர்கள் பாடிய குமரகுருபர சுவாமிகள் சரித்திரம்.

வடசொலும் தாணிழற்சேர "—என சம்பந்தப் பெருமானே இருமொழிகட்கும் இணையிலாப் பெருமை தந்திருந்தும், தாம் இறைவனைப் பாடுதற்குத் தக்கமொழி தென்மொழியே எனக் குமரகுருபரப் பெருமான் தேர்ந்தனர்; அஃதென்னையோ எனின், செந்தமிழே—

*" பித்தனென இகழ்ந்ததும் என்னுதுபா டுகளெனவும், பெண்பால் தூது
சித்தமகிழ்ந் ததுவேட்டுச் செலவு, மினுஞ் செயற்கரிய செயவும் தானே
ஒத்தஉருத்தற் புலவனென வுறவும், எழுதிடு வானு வுறவும் ஓங்கு
வித்தகவண் கயிலையகம் வருவித்துக் கேட்டிடவும் மேய தம்மா"

ஆதலின், செந்தமிழையே யாம் கொள்ளுவேம் எனத் துணிந்து, சிறந்த கலிவெண்பா ஒன்று " பூமேவு செங்கமலப் புத்தேளும் " எனத் தொடங்கிச் செந்தூர்ப் பெருமான் முன்னிலையில் ஓதிப், புலவர்கள் திலகமாய் விளங்கா நின்றார். இது—

*" ஆதலிற் றென் கலையேநாங் கோடுமெனத் துணிந்து, பெரு கன்பு போர்ப்ப
மேதகப் " பூ மேவு " முதல் எடுத்தணிமுற் சிறந்தகலி வெண்டா ஒன்று
போதகனு கியபெருமாற் கோதியள வருங்கேள்விப் புலவர் சூழக்
காதலினு யிடையமர்ந்தார் அறங்கள்தலை யெடுக்கவந்த காட்சியாரே,"

என்னுஞ் செய்யுளால் விளங்குகின்றது.

அதா அன்றிப், பின்னர் வைத்தீசுரன் கோயிலில் வீற்றிருக்கும் முத்துக் குமரப் பெருமான், "இங்கு நம்மைநீ யாடுறு தேகலே என்று, தங்கு பேரரு ளால்நுதற் பூதியுஞ் சாத்தி"யும், "பொன்பூத்த குடுமி" என முதலடியும் எடுத்துக் கொடுத்து, இவரிடம் பிள்ளைத்தமிழ்ப் பெற்ற சரிதமும் உணரற் பாலது. செந்தமிழின் நேயத்தாலன்றோ செவ்வேற் பெருமான் இங்ஙனம் ஊமைக்கும் நீப்பில் புலமை தந்து விளையாடினர்.

---

## 12. முருகக்கடவுள் மாடுமேய்ப்போனாய் வந்த திருவிளையாடல்.

தமிழின் மாட்டு ஆர்வமுள்ள முருகபிரான் இரண்டு தமிழ்ப் புலவர்கள் வாது செய்யுமிடத்து ஆணவமற்ற அன்பருக்கே உதவுவர் என்பதற்குப் பின்னும் ஒரு சான்று பின்வரும் சரிதம்.

பாண்டி நாட்டில் திருக்குருகூரில் (திருநெல்வேலி ஜில்லா ஆழ்வார் திருநகரியில்) பிரதிவாதி பயங்கரன் என்னும் பெரிய பண்டிதர் ஒருவர் இருந்தார். அவர் ஆங்காங்குள்ள தமிழ்ப் புலவர்களோடு தருக்கஞ்செய்து வெற்றிகொண்டு அவர்கள் பொருள்களைக் கொள்ளை கொள்ளும் பெற்றிமை வாய்ந்தவர். இவர் நாகாசலம் எனவழங்குந் திருச்செங்கோட்டில் இருந்த "குணசீலன்" என்னும் தமிழ்ப் புலவரை வெற்றிகொள்ளக் கருதி இன்னதினத்தில் வாதுக்கு வருவேன் என்று ஓலை எழுதி அனுப்பினர். வாதுக்கு அழைக்கும் புலவரது பேரும் பெருமையும் திசை போயவை. ஆகையால், குணசீலன் அஞ்சி "குமரப் பெருமானே! குணக்குன்றே! குறைவிலா நிறைவே! கோதிலா அமுதே! வான்நாடனே! வழித்துணை மருந்தே! மாசிலாமணியே! செந்தமிழ் நேயா!" இச்சமயம் பிரதிவாதி

பயங்கரனிடம் பங்கமுறு வண்ணம் அருள் புரிதல்வேண்டும்—ஐயனே! எனை அஞ்சலென் றருளாய்!" எனப் பன்முறை தாழ்ந்து வணங்கி நித்திரைகொண்டனர். அவர் கனவில் முருகக்கடவுள் ஒரு வித்துவான் போலத்தோன்றி 'அன்ப! அஞ்சற்க! பிரதிவாதி பயங்கரனை யான் வெருட்டி விடுகிறேன்' எனக் கூறி மறைந்தனர். பிரதிவாதி பயங்கரன் மறுநாட் காலையில் 'வெண்குடை தாளமேள தண்டிகை' யுடன் பல்லக்கில் திருச்செங்கோட்டைச் சமீபித்து வருகையில், பாம்பு படம் எடுத்தாற் போன்ற உருவத்துடன் திருச்செங்கோட்டு மலை தோன்றுவதைக் கண்டு, பல்லக்கை நிறுத்தி, அம்மலையைப் பார்த்து இது நாகமலை என்றால் இந்த நாகம் ஏன் படத்தை விரித்து ஆடாது அசைவற் றிருக்கின்றது என்னுங் கருத்து விளங்க—

"சமர முகத்திருச் செங்கோடு சர்ப்ப சயிலமென்ன
அமரிற் படம்விரித் தாடாத தென்னை?"

எனக் கட்டளைக் கலித்துறைப் பாடலொன்று துவக்கி, தாம் எழுப்பிய வினவுக்கு விடையைப் பூர்த்திசெய்யத் தோன்றாது மயங்க, அருகில் மாடு மேய்க்கும் பிள்ளையாய் நின்ற நமது அண்ணல் குமரவேள் அப்புலவன் அருகிற்சென்று "ஏன் ஐயா! விழிக்கின்றீர்; நான் உமது பாடலைப் பூர்த்தி செய்கின்றேன்—பாரீர்" எனக்கூறி

.............................................."அஃதாய்ந்திலையோ
நமரன் குறவள்ளி பங்கன் எழுகரை நாடுயர்ந்த
குமரன் திருமரு கன்மயில் வாகனங் கொத்துமென்றே"

எனப் பாடலைப் பூர்த்தி செய்தனர். இதனைக் கேட்ட புலவர் திடுக்கிட்டனர்! ஆஹா! இப் பாம்புமலை படம் எடுத்து ஆடாததற்குக் காரணம் முருகக் கடவுளின் திருமலையிது; ஆதலால் அவர் வாகனமாகிய மயில் அம் மலைமீதுள்ளது,

படம் எடுத்தால் அம் மயில் கொத்திவிடும் என்று பயந்து இப்பாம்பு படம் எடுக்கவில்லை என எவ்வளவு நயம்படக் கருத்தமைத்து பாடலை ஒரு நொடியில் இப்பிள்ளை பூர்த்தி செய்தது! என வியந்து பல்லக்கினின்றும் இறங்கி, "அப்பா! நீ யார்! இவ்வளவு கவித்திறம் உனக்கு எப்படிக் கிடைத்தது" என வினவினர். அதற்கு ஐயன் "ஐயா! இத் திருச்செங் கோட்டிற் குணசீலர் என்னும் வித்துவ சிகாமணி யுள்ளனர். அவரது கடை மாணாக்கன் நான்; 'ஆசுகவி பாடுவதில் ஆற்றல் இல்லை. நீ மாடு மேய்த்துப் பிழை' என என்னை அவர் ஒதுக்கி உள்ளார்" என விடையளிக்க, நன்று நன்று கடை மாணாக் கன், ஆற்றலில்லாதவன், என ஒதுக்கப்பட்டவன் இத்துணைத் திறம் உள்ளவனாயிருந்தால் ஏனைய இடைமாணாக்கர் தலை மாணாக்கர் எத்துணைப் பேராற்றல் உடையவர்களாயிருக்க வேண்டும்; அவர்களைப் பயிற்சி செய்யும் ஆசிரியராய அக் குணசீலர் எவ்வளவு திறமை வாய்ந்தவராக இருக்க வேண்டும் எனப் புலவர் யோசித்து அஞ்சி நடுக்கங்கொண்டு பல்லக்கிலேறி வந்த வழியே திரும்பி ஓடிவிட்டார் என்பது கொங்குநாட்டுத் திவ்ய சரிதம். இச்சரித்திரத்தின் குறிப்பு திருச்செங்கோட்டுப் புராணத்திலும் பின்வரும் கொங்கு மண்டல சதகச்செய்யுளிலுங் காணக்கிடக்கின்றது.

"பெருமை மிகும் அரவச்சிலம் பாமெனிற் பெட்புறுமவ்
வரவு படம்விரித் தாடாத தென்னென் றகத்துனுமோர்
*கருவி வெருக்கொள ஆமேய்ப் பவனைக் கனிந்துதிரு
மருகன் மயில்கொத்து மென்றெனச் சொல் கொங்கு
[மண்டலமே"

இச்சரித்திரத்திற் சிவபிரான் விறகுவிற்ற திருவிளை யாடலைப் போலச் சிவகுமாரனும் ஆணவமற்ற தமிழ்ப் புலவ

* கருவி - கர்வி: அகங்காரங் கொண்டவன்.

னுக்காக மாடுமேய்ப்பவனாய்த் தோன்றி உதவிய ஆடல் வெளியாகின்றது.

—

மேற் கூறியவாறே பிற்காலத்தும் முருகக் கடவுளின் அநுக்கிரகம் பெற்று அவர்மீது தமிழ்ப் பாடினர் பலர்.

பகழிக் கூத்தர் என்னும் வைணவர் - முருகன் அருள் பெற்று வயிற்றுநோய் நீங்கத் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் பாடினர்.

வென்றிமாலைக் கவிராயர் - முருகன் அருள்பெற்று திருச்செந்தூர்ப் புராணம் பாடிய சரித்திரமும் அப்புராணத்திற் காணக் கிடைக்கும்.

சிதம்பரசுவாமிகள் - முருகன் திருவருட்டுணையைக் கொண்டு திருப்போரூர்ச் சந்நிதிமுறை பாடினர்.

கச்சியப்ப முனிவர் - தமது அருமை மாணக்கரும் விசேட பத்தியுடையவருமான கந்தப்பையரது வயிற்றுநோய் நீங்கத் திருத்தணிகை யாற்றுப்படையைப் பாடி முருகபிராற்குத் தமிழில் உள்ள ஆர்வத்தைப் பிரகாசப்படுத்தினர்.

சுப்பிரமணிய முனிவர் - என்னும் அமிர்தகவிப் புலவர்- சுப்பிரமணியர் திருவிருத்தமும், திருத்தணிகைத் திருவிருத்தமும் பாடித் தம்மைச் சரணடைந்த இருவர்களுக்கு முறையே நேர்ந்திருந்த குட்டரோகத்தையும் அந்தகத் தன்மையையுந் தீர்த்தனர்.

கந்தப்பதேசிகர் - தணிகாசலஅநுபூதி பாடி ஒருவருடைய நோயைத் தீர்த்தனர். இங்ஙனம் முருகன் அருள்கொண்டு தமிழ்ப் பா பாடின பெரியோர்கள் பின்னும் பலருளர். விரிக்கிற் பெருகும் என்று விடப்பட்டன.

இவை யெலாம் நூல்களிற் கண்டன. எம்பெருமானது தமிழ்ப் பேரன்பு இன்றும் வெளிப்பட நிற்கின்றதென்ப தற்குச் சில வருடங்களுக்கு முன்பு யான்கண்ட கனு நிகழ்ச்சி யொன்று சான்றாக உளதாதலின் அதனையுங் கூறு வேன். பெருமிதத்தாற் கூறியதென்று அன்பர்கள் கொள்ளா திருக்க வேண்டுகின்றேன். ஏழு வருடங்களுக்கு முன்பு (1934) திருத்தணிகைக்கு நான் போய் முருகக் கடவுளின் சந் நிதியில் நின்று திருத்தணிகைக் குரிய திருப்புகழ், அலங் காரம், அந்தாதி முதலிய பாடி நின்றபொழுது, அந்தாதியில் "சேர்ப்பது மாலய" என்னும் பாடல் முழுமையும் ஞாபகத் துக்கு வாராத காரணத்தால், அரை குறையாக அப்பாடலைச் சொல்ல முயலுவதை விட, வேறு அலங்காரச் செய்யுள்களைப் பாடலாம் என்று பாடி வீட்டுக்கு வந்தேன். அன்றிரவு என் கனவில் செந்தமிழ்ப்பிரான் ஒரு மறைச்சிறுவர் கோலத்துடன் வந்து ஒரு ஆற்றங் கரையிற் கொடி வழியாகப் போய்க்கொண் டிருந்த என்னை வழி மறித்து "நல்ல எலுமிச்சம்பழத்தை மறந்தாயே" எனக் கூறினர். "எங்கு மறந்தேன்?" என நான் அப்பிள்ளையை வினவ "கந்தரந்தாதியில்" என அப் பிள்ளை விடை யளித்தது; 'ஆ! ஆ! நீ சிறுவனல்ல! நீதான் முருகன்!' என அவரைக் கட்டியணைக்க நான் முன்செல்ல அந்தச் சிறுவர் ஓடி மறைந்தனர். கந்தரந்தாதியில் எம்பெரு மானுக்கு எவ்வளவு ஆசை பார்த்தீர்களா! அதில் ஒரு பாடலை எலுமிச்சம் பழப்பாட்டு எனப் புகழ்ந்தனர். இன்னும் அவ ருக்கு உகந்த மாம்பழப்பாட்டு, பலாச்சுளைப் பாட்டு முதலியன வும் உண்டு போலும். தமிழ்ச்சுவை தெரிந்த முருகருக்கு அல்லவோ அப்பாடல்களின் உண்மைப் பெருமை விளங்கும். இங்ஙனம் கனவிற்றோன்றி அருணகிரியாரின் செந்தமிழ்ப் பாக்களில் தமக்குள்ள ஆர்வத்தை முருகபிரான் காட்டிய நிகழ்ச்சியை நினைந்து மகிழ்ந்து பின் வரும் பாடல்களைப் பாடினேன்; வியந்தேன்: விம்மிதம் உற்றேன்.

சந்நிதியில் நின்றுபுகழ் அந்தாதி பாடுந்
தருணத்தில் அந்தாதியில்
தனிமலைக் குரியதாஞ் 'சேர்ப்பது மாலெ'னத்
துவக்குந் தனிப்பாடலை
அந்நிலையில் ஓதுதற் கடியேன் மறந்திட லும்
அன்றிரவில் என்கனவிலே
அண்டியொரு விப்பிரச் சிறுவனாய்த் தோன்றியுடை
அங்கம் ப்ரகாசமாக
நன்னிறத் தேகத்தில் வெண்ணிறத் திருநீறு
நன்றொளிர எதிரில் நின்று
"நில்ல எனு மிச்சம் பழமொன்று கந்தரந்
தாதியில் மறந்தனை" என
என்னெதிரில் நின்றநீ சிறுவனலை முருகனே
என்றுரைத் தியான்பிடிக்க
எழுமுனே சிறிதோடி திருவுரு மறைந்த முரு
கேசதணி கேச இறையே!

ஓடி மறைந்த உடனே என் உடலஞ் சிலிர்க்க விழித்தெழுந்தேன்
நாடி யெனையும் ஒருபொருளா நயந்த கருணை என்னென்பேன்
வாடி வாடி முருகேசா வாவா என்றே அலறுவேன்
தேடி உனையான் பிடிக்குமொருதிறமேதென்றே திகைப்புற்றேன்.

திகைக்கும் என்னையும் தேற்றுதல் வேண்டுமே
றுகைக்கும் எந்தைக்கும் ஓம் பொருள் சொற்றனை
நகைக்கும் நானிலம் கைவிடின் நன்னெஞ்சக்
குகைக்குள் தங்கு குழந்தைக் குமரனே.

மேற்கண்ட சரித்திரங்களால், முன்னர்க் கூறியவாறு முருகக் கடவுள் எவ்வெவ்வாறு தமது தமிழ்க் காதலை வெளிப்படுத்தினர் என்பது வெள்ளிடை மலைபோல விளங்கு

கின்றதல்லவா? அவர் தமிழை ஆய்வார், தமிழைப் பாடுவார், பாடுவார்க் கருளுவார், அடியெடுத்துக் கொடுப்பார், தமிழுக்காகத் தனிவழி நடப்பார், கனவில் வருவார், வேல் கொண்டு நாவிற் பொறித்துத் தமிழ் பாடச் செய்வார்.

கவிசொல் எனக் கட்டளையிட்டு யார்யாருக்கு முருகபிரான் அடியெடுத்துக் கொடுத்தார் என்பது பின்வரும் க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்ச் செய்யுளால் அறியக் கிடக்கின்றது.

“புவியில் நக்கீரரையும், ஔவையையும், நீ முன் புகழ்ந்த

“பொய்யா மொழியையும், புகழ்கொண்ட அருணகிரி
நாதரையும்,

“வெருசித்தர் * போற்று கருவூரரையும், ** நல்ல பகழிக்
கூத்தரையும்**

“காசிவாழுஞ் சிவாநந்த குமர குருபர முனியையும்,

“கவிசொலென் றேஅடி எடுத்துக் கொடுத்தவன்
கனிவாயின் முத்தமருளே!

ஈந்தனே புள்ளூரில் வந்தமுத் துக்குமர
கனிவாயின் முத்தமருளே!.”

---

## முடிபு

தமிழ்க் கல்வியையும், தமிழ் விருத்தியையும் நாடினோர் தமிழ்க் கடவுளாம் முருகரையன்றி வேறு நாடுவதற்கு இடமில்லை என்பது இக்கட்டுரையின் தேர்ந்த முடிபாகும்.

---

* கருவூர்ச் சித்தருக்கு முருகபிரான் அருளிய சரிதம் கிடைக்க இல்லை.

## துதி

செந்தமிழ்க் கடவுள்நீ என்றனைப் பெரியோர்கள்
செப்புவது பேருண்மையே ௦
செந்தமிழை யன்றுநீ சம்பந்த மூர்த்தியாய்ச்
செகமுழுது மேவிரித்தாய்
முந்தி சங்கப்புலவர் தங்கலாந் தீர்க்கவே
மூகனைத் தோன்றி நின்றாய்
முன்னுனைப் பாடாத கீரனை வெருட்டி நீ
முருகாறு பெற்ற தன்றி
வந்தனைசெய் யாதபொய் யாமொழியை வாழ்விக்க
மார்க்கத்தில் எதிரில் வந்து
வழிமறித் தொருபாடல் பெற்றது நிரம்பாது
வாரிதியின் வெள்ள மெனவே
சந்தஞ்சொ லருணகிரி தேன்பாவு பாடற்
றனியமுது கொள்ளை கொண்டாய்
தண்டமிழ்ச் சுவையுனைப் போலொருவர்
கண்டதிலை தணிகா சலக்கடவுளே.

முற்றும்.

வேலு மயிலுந் துணை.

---

Kesari Printing Works, Mount Road, Madras.